
# காவல் நீதிக்கான குரல்

# Voices for Custodial Justice




## பரமக்குடியில் தலித்களை அரசே கொன்று குவித்தது






# இறந்தபின் செய்யப்படும் சவப்பரிசோதனைகள்

**சவப்பரிசோதனை அறிக்கைகள் எல்லாம் வெறும் பாசாங்குகளா? அவை சவப்பரிசோதனையில் கண்டறிந்தவைகளின் அடிப்படையில் எழுதப்படுகின்றனவா? சென்னையிலுள்ள இராயப்பேட்டை பொதுமருத்துவமனையிலுள்ள அடையாளம் காண்பதற்காக சவங்களை வைத்திருக்கும் இடத்தில் பெரும்பாலான சவப்பரிசோதனைகள் மருத்துவ உதவியாளர்களாலும் தொழில்நுட்ப வேலையாட்களாலும்தான் செய்யப்படுகிறது. ஆனால் இந்த சவப்பரிசோதனைகள் வழக்கில் தொடர்புடைய பொருட்களை அதாவது உடலில் அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து குற்றம் நடந்தது தொடர்பான செய்திகளை தெளிவாக்குகிற வல்லுனர்கள்(Forensic Experts) தான் இவற்றைச் செய்ய வேண்டும். அவர்களுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. ஆனால் மருத்துவ உதவியாளர்கள் செய்வது எப்படி இருக்கிறது என்றால் அறுவைசிகிச்சையினை மருத்துவருக்கு பதிலாக செவிலியர்களே செய்வதைப் போன்றது. இவர்கள் தரும் அறிக்கைகள் நம்பத்தகுந்ததாக இருக்குமா?**

முன்னாள் மத்திய தொலைத்தொடர்பு மந்திரியான A.இராஜாவின் உதவியாளர் சாதிக் பாட்ஷா (வயது 39) மார்ச் 16 ஆம் தேதியன்று தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது கொல்லப்பட்டுத் தொங்கவிடப்பட்டாரா? பாட்ஷாவின் மனைவி சென்னையிலுள்ள தனது வீட்டில் அவர் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தார். இந்த சாவு முன்னாள் அமைச்சரின் பசுமை வீடு கம்பெனி பண ஊழலில் ஈடுபட்டது தொடர்பாக சாதிக்பாட்ஷாவை கைது செய்ய இருந்த நிலையில் நிகழ்ந்துள்ளது. அவர் ஏதும் சொல்லிவிடாமல் இருப்பதற்காக இது நிகழ்ந்ததா?

இந்த சோக நிகழ்வு நடந்த சில மணி நேரங்களுக்குப் பின்பு காவல்துறை இதனை தற்கொலை என்று ஆலோசித்தது. பாட்ஷாவின் மனைவியுமே அவ்வாறுதான் கூறினார். ஆனால் பரிசோதனை செய்த டாக்டர் ஏ.டேகல் இந்தச் சாவு மூச்சுத்திணறல் காரணமாக உயிர் இழப்பு நேர்ந்தது என்று கூறி இது கொலையா, தற்கொலையா என்பது பற்றிக் கூறவில்லை.

இந்த வழக்கின் உணர்ச்சிமயமான முக்கியத்துவம் கருதி டாக்டர்.டேகல் மருத்துவக் கல்வி இயக்குனகரத்துக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் நான்கு மருத்துவ வல்லுனர்கள் அமைந்த குழு ஒன்றை ஏற்படுத்தி இறுதித் தீர்ப்பு இந்தச் சவப்பரிசோதனை அறிக்கையின் மீது வழங்கப்படக் கேட்டுக்கொண்டார். இந்த டாக்டர் டேகலின் வேண்டுகோளை மருத்துவக் கல்வி இயக்குனரகம் 60 ஆண்டுகால மருத்துவ விதியை மேற்கோள்காட்டி மறுதலித்து விட்டது. அதன்பின் இந்த வழக்கு மத்தியப் புலனாய்வுத்துறைக்கு அனுப்பப்பட்டு அங்கு ஒரு சிறப்பு வல்லுனர் குழு இந்த சவப்பரிசோதனை அறிக்கையை திறனாய்வு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது. இது கொலையா? தற்கொலையா? என்பது பற்றிய அந்த சிறப்புக்குழுவின் இறுதி அறிக்கை இன்னும் வரவில்லை.

---

**ஒரு சில முக்கியமான சவப்பரிசோதனையைத் தவிர்த்து நாங்கள் பெரும்பாலானவற்றில் காவல்துறையின் துர்மரண அறிக்கையை ஒட்டி அறிக்கை கொடுக்கிறோம்" என்று ஒரு மருத்துவர் தெரிவித்தார்.**

---

இந்நிலை நம்மிடையே ஒரு பெரிய கேள்வியை எழுப்புகிறது. தமிழ்நாட்டில் நிகழும் சவப் பரிசோதனை அறிக்கைகள் நம்பத்தகுந்தவைதானா? சாவு நிகழ்ந்த விதத்தை அவை பிரதிபலிக்கின்றனவா அல்லது காவல்துறை அல்லது அரசியல் தலைமைகளின் விருப்பத்திற்கு ஏற்ப எழுதப்படுகின்றனவா? தொழில்நுட்ப வல்லுநர்கள் இந்தச் சாவு அறிக்கைகள் ஒரு நிலை சார்பான அறிக்கைகள் என்பதைக் கடுமையாக மறுக்கின்றனர். ஆனால் கூர்மையாக சிந்தித்தோம் என்றால் நமக்கு வேறு வகையான கதை கிடைக்கும்.

அரசு இராயப்பேட்டை மருத்துவமனையிலுள்ள சவக்கிடங்கிற்கு ஒருமுறை சென்று பார்வையிட்டால் பல விஷயங்கள் தெளிவாகத் தெரிகிறது. பெரும்பாலான சவப்பரிசோதனைகள் மருத்துவ உதவியாளர்களாலும், தொழில் நுட்ப வேலையாட்களாலும்தான் செய்யப்படுகிறது. ஆனால் இந்த சவப்பரிசோதனைகள் வழக்கில் தொடர்புடைய பொருட்களை அதாவது உடலில் அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து குற்றம் நடந்தது தொடர்பான செய்திகளைத் தெளிவாக்குகிற தடயவல்லுனர்களால்தான் செய்யப்பட வேண்டும். அவர்களுக்குத்தான் அந்த அதிகாரமே இருக்கிறது. ஆனால் மருத்துவ உதவியாளர்கள் சவப்பரிசோதனைகள் செய்வது எப்படி இருக்கிறது என்றால் அறுவை சிகிச்சையினை மருத்துவருக்குப் பதிலாக செவிலியர்களே செய்வதைப் போன்றது.

**“பயிற்சி பெற்ற தடய மருத்துவ வல்லுனர்கள் இதுபோன்ற மருத்துவ மனைகளில் இருப்பதில்லை, எனவே சவப்பரிசோதனை அறிக்கைகள் காவல்துறையின் அதிகாரிகளின் விருப்பத்திற்கேற்ப அமைந்திடும்”**

“நாங்கள் மிகப்பெரிய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறோம். இன்று ஒரு சவப்பரிசோதனை செய்தோம். ஆனால் சவகிடங்கிற்கு பொறுப்பாளரான தடய வல்லுநரோ எதையும் கண்டுகொள்ளாமல் சவக்கிடங்கில் என்ன நடக்கிறது என்பது பற்றியும் கவலைப்படாமல் இருக்கிறார். இந்த வல்லுநர்கள் வாரத்திற்கு ஒருமுறை வந்து பார்வையிட்டுவிட்டு சவப்பரிசோதனை அறிக்கையில் கையெழுத்திடுகிறார்கள்” என்று வருத்தத்துடன் மருத்துவ உதவியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த வகையாகத்தான் எல்லா சவப்பரிசோதனைகளும் எல்லா அரசு மருத்துவமனைகளிலும் நடைபெறுகின்றன. “இதிலே மறைப்பதற்கு என்ன இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள எல்லா அரசுப் பொது மருத்துவமனைகளிலும் ஏறத்தாழ இதே நிலைமைதான். சொல்லப்போனால் 99 % சவப்பரிசோதனை அறிக்கைகள் காவல்துறையின் துர்மரண அறிக்கையை ஒட்டித் தரப்படுகின்றன” என்று தடய வல்லுனர்களில் பெரும்பாலானோர்கள் கூறுகின்றனர்.

அவர்கள் (தடய வல்லுனர்கள்) டாக்டர். டேகலை ஒரு ஹீரோவைப்போல் பார்க்கிறார்கள். டாக்டர் டேகல் தம் பதவியை சட்டசபைத் தேர்தலில் நிற்பதற்காக ராஜினமா செய்தார். மருத்துவக் கல்வி இயக்குனரகம் பற்றியும் அவர் பேசினார். மருத்துவக் கல்லூரி இயக்குனரகம் மருத்துவக் கல்விக்கு பொறுப்புவாய்ந்ததாக இருந்தாலும், மருத்துவ தடய வல்லுனர் துறையை தீண்டத்தகாததைப் போன்று நடத்துகின்றன என்று ஒரு மூத்த தடய மருத்துவ வல்லுனர் கவலையுடன் கூறினார். மேலும் அவர் கூறியதாவது “ஒரு தடய மருத்துவ வல்லுனர் ஒரு மாதத்திற்கு 50 முதல் 100 சவப்பரிசோதனை வழக்குகளைக் கையாள வேண்டி இருக்கிறது. இந்த வேலை பளுவின் காரணமாக நாங்கள் மனச்சோர்வு அடைந்து விடுகின்றோம், சவக்கிடங்குகளிலுள்ள சுகாதாரமற்ற நிலையும், நாற்றமும் எங்களை நோயாளிகளாக மாற்றி விடுகின்றது.”

தமிழ்நாட்டில் மொத்தத்தில் 20 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. ஒவ்வொரு கல்லூரிக்கும் குறைந்தது 2000 சவங்கள் பரிசோதனைக்காக வருகின்றன. ஆனால் வெறும் 17 மருத்துவத் தடய வல்லுநர்களே மாநிலத்தில் சவப்பரிசோதனை செய்வதற்காக இருக்கின்றார்கள். இவர்களில் 7 பேர் சென்னையிலுள்ள 4 பெரிய அரசு மருத்துவ மனைகளில் இருந்து சமாளிக்க வேண்டி இருக்கிறது.

“50 மருத்துவத் தடய வல்லுனர்களுக்கான பதவிகள் பல்லாண்டு காலமாக இந்த 20 மருத்துவக் கல்லூரிகளில் நிரப்பப்படாமலிருந்து வருகின்றன. இப்படி இருக்கையில் எப்படி எங்களிடமிருந்து மிகச்சரியான ஒரு சவப்பரிசோதனையை எதிர்பார்க்கிறீர்கள்? ஒரு சில முக்கியமான சவப்பரிசோதனையைத் தவிர்த்து நாங்கள் பெரும்பாலானவற்றில் காவல்துறையின் துர்மரண அறிக்கையை ஒட்டி அறிக்கை கொடுக்கிறோம்” என்று ஒரு மருத்துவர் தெரிவித்தார்.

இந்த நிலைமை மாவட்ட மற்றும் தாலுக்கா அளவிலான மருத்துவமனைகளில் இன்னும் மோசமானது, “பயிற்சி பெற்ற தடய மருத்துவ வல்லுனர்கள் இதுபோன்ற மருத்துவ மனைகளில் இருப்பதில்லை, எனவே சவப்பரிசோதனை அறிக்கைகள் காவல்துறையின் அதிகாரிகளின் விருப்பத்திற்கேற்ப அமைந்திடும்” என்று அவர் மேலும் கூறினார்.

ஏன் ஒரு சவப்பரிசோதனை அறிக்கை தயாரிக்க அதிக நேரம் செலவாகிறது என்பதைப்பற்றி ஒரு வல்லுனர் கூறும்போது இறப்பிற்கான காரணம் மற்றும் நேரத்தை அடையாளம் கண்டுகொள்ள அவர்கள் பலவிதமான பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டி இருக்கிறது. இதில் இறந்தவர் உயிர் பிரியும்போது அணிந்திருந்த உடைகளையும் இறந்தவரின் ஒவ்வொரு உடல் உறுப்பையும் நுணுக்கமாக ஆராய வேண்டியதும் அவசியம்.

“நாங்கள் அந்த வகையில் விளக்கமான அறிக்கை கொடுத்தால்தான் சோதனையிடும் அதிகாரி இறப்பிற்கான காரணத்தையும், இறப்பு நேர்ந்த விதத்தையும் கண்டறிய முடியும்”, என்று ஒரு தடய வல்லுனர் கூறினார்.

ஆனால் இந்த வகையை முழுமையாகக் கடைபிடிக்க முடிவதில்லை. ஏனெனில் இந்தத் துறையில் போதிய பணியாளர்கள் இல்லை என்பதோடு அடையாளம் காண்பதற்காக சவங்களை வைத்திருக்கும் இடத்தில் கட்டமைப்பு வசதிகளும் மிக, மிகக் குறைவு. இதன் காரணமாகத்தான் வழக்கறிஞர் அசோக்குமார் சென்னை உயர்நீதிமன்றத்தில் 3 தடய மருத்துவ வல்லுநர் குழு அமைத்து தன்னுடைய மகன் சதீஸ்குமாரின் சாவிற்கான காரணங்களைக் கண்டறிவதற்கு ஆணை பெற்றார். 34 வயதுடைய உடம்பு I.C.F கம்பெனி தொட்டியில் கிடந்தது.
பிரிதொரு பிரச்சனை இந்த தடய வல்லுநர்களுக்கு இருக்கின்றது. அது மிக்குறைந்த கட்டணமே சவப்பரிசோதனைகளுக்கும் அறிக்கை கொடுப்பதற்கும் கொடுக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் ஒரு சவப்பரிசோதனைக்கு வெறும் ரூ.150 மட்டுமே கொடுக்கப்படுகின்றது. ஆனால் பக்கத்து மாநிலமான கர்நாடகாவில் ரூ.300 பகலிலும் மாலை 5 மணிக்குமேல் செய்யப்படும் சவப்பரிசோதனைக்கு ரூ.500ம் கொடுக்கப்படுகின்றது. நீதிமன்றங்களில் அறிக்கை கொடுப்பதற்காக மருத்துவர்களுக்கு ஒரு வழக்கிற்கு ரூ.12தான் கொடுக்கப்படுகின்றது.

இந்தக்காரணங்களினால் எந்த மருத்துவ மாணவரும் தடய அறிவியலை முக்கியப்பாடமாக எடுத்து படிக்க முன்வருவதில்லை. 1997 முதல் 2001 வரை, மாநிலத்தில் ஒரு மாணவர் கூட படிக்க முன்வரவில்லை. 2001 க்குப் பின்தான் 15 மாணவர்கள் தடய அறிவியலில் MD பெற்றனர். அவர்களில் 10 பேர் 2 வருடங்களுக்குத் தடய அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்று விதிமுறை இருந்தும் கூட அவர்கள் வேலையில் சேரவில்லை. மருத்துவக் கல்லூரி இயக்குனரகம் அவர்கள் மிது எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

அரசு உடனே விழித்தெழுந்து இந்தத்துறையில் அதாவது தடயத்துறையை புதுப்பிக்க வேண்டும். மேலும் வாதாடும் வழக்கறிஞர்களை சவப்பரிசோதனைக்குழுவில் ஒருவராக சேர்க்க வேண்டும். அப்படி செய்யாத பட்சத்தில் மேற்கண்ட நிலைமைதான் தொடரும், மாற்றம் இருக்காது.

சதீஸ்குமார் வழக்குதனில் மட்டும்தான் மருத்துவர் வழக்காடும் குழுவில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தார். இவ்வாறு தமிழ்நாட்டில் மருத்துவ சட்ட வரலாற்றில் இரண்டாவது முறையாக நிகழ்ந்திருக்கிறது. எல்லா வழக்குகளிலும் இதனைக் கட்டாயமாக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்று பொதுவாக தடய மருத்துவ வல்லுனர்கள் கருதுகின்றார்கள்.

**– கோகுல்வண்ணன்**

**Courtesy – The New Indian Express (July 2011)**

## குடிக்காமல் எந்த உடம்பையும் தொடக்கூட முடியாது

சவக்கிடங்குகளில் வேலைசெய்யும் மருத்துவ உதவியாளர்களின் துயரங்கள் சொல்லிமாளாது. முதலாவதாக அங்கிருக்கும் துர்நாற்றத்தை சகித்துக்கொள்ள வேண்டும். மனரீதியாக அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுகின்றார்கள். சென்னையிலுள்ள 4 அரசு மருத்துவமனைகளில் பிணங்களை அடையாளம் காட்டும் இடங்களில் பணியாற்றும் மருத்துவ விடுதியாளர்கள் கூறும்போது “இப்படிக் குடிக்காமல் எந்த உடம்பையும் எங்களால் தொடக்கூட முடியாது” என்று கூறினர்.

சவப்பரிசோதனை செய்யும் உதவியாளர்களில் ஒருசிலர்தான் நிரந்தரப்பணியாளர்கள். “நாங்கள் உடம்பினைப் பெற்றுக்கொள்ள வரும் உறவினர்கள் தரும் பணத்தைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறோம்” என்று ஒருவர் கூறுகிறார்.

ஒரு மூத்த தடய மருத்துவர் அரசு சவக்கிடங்குகளின் நிலைமை மிகப்பரிதாபகரமானது தான் என்று ஒத்துக்கொள்கிறார். மேலும் சவப்பரிசோதனை செய்வதற்கான கருவிகள் கூட சரியானவைகளாக இருப்பதில்லை என்று கூறுகிறார். மேலை நாடுகளில் சவக்கிடங்குகளின் துர்நாற்றத்தை போக்கும் வசதிகள் இருக்கின்றன. ஆனால் இங்கு நாங்களோ வாந்தி எடுக்கும் நிலைமையில் உள்ளவற்றில்தான் பணி செய்யவேண்டி இருக்கிறது” என்று ஒரு மருத்துவர் கூறுகின்றார்.

# சவப்பரிசோதனை அறிக்கைகளின் மருத்துவப் பரிசோதனை கட்டுக்கடங்காமல் உள்ளது : மனித உரிமைக் குழுக்கள்

– ஜார்ஜ்ராஜசேகரன்

மனித உரிமை குழுக்கள் சவப்பரிசோதனை அறிக்கைகள் மாற்றி எழுதப்படுவதை அல்லது காவல்துறைக்கு ஏற்றாற்போல் எழுதப்படுவதை சுட்டிக்காட்டுகிறார்கள். மக்களின் குடியுரிமைகளுக்கான மையம் 2004 ஆம் வருடம் வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்டபோது சவப்பரிசோதனை அறிக்கை எப்படி நீதிமன்ற விதிகளுக்கு உட்படாத வகையில் இருந்தது, வீரப்பனின் உடம்பில் இருந்த காயங்கள் தொடர்ந்து சித்ரவதைக்கு உட்பட்ட அடையாளங்களாக இருந்தது, என்பதைச் சவப்பரிசோதனை அறிக்கைகள் தெளிவாகக் காட்டின. சேலம் அரசு மருத்துவமனையில் கிடந்த அறிக்கை வீரப்பனும், வீரப்பனின் ஆட்களும் துப்பாக்கி குண்டுகளால் செத்ததாக காட்டியது. மக்கள் கண்காணிப்பகத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளர் மு.செந்தில்ராஜா கூறுவது என்னவென்றால் "தற்கொலை வழக்குகளில் பெண்கள் இறந்தபோது முக்கியச் செய்திகளை மறைத்து மாற்றி சவப்பரிசோதனை அறிக்கைகளில் எழுதுவது சர்வ சாதாரணம்." பெரும்பாலான வழக்குகளில் காவல்துறை பிரிவு 174 (சந்தேக மரணம்) பிரிவின் கீழ் வழக்குகளைப் பதிவதும் திருமணமாகி 7 வருடங்களுக்குள் இறந்தால் RDO விசாரணை நடத்தவேண்டும். பெரும்பாலான RDO–வின் விசாரணை அறிக்கை உப்புசப்பு இல்லாததாகவும் காவல்துறைக்கு ஏற்ற வகையிலும் எழுதப்பட்டிருக்கும்.

**"தற்கொலை வழக்குகளில் பெண்கள் இறந்தபோது முக்கியச் செய்திகளை மறைத்து மாற்றி சவப்பரிசோதனை அறிக்கைகளில் எழுதுவது சர்வ சாதாரணம்."**

உரிமை நிறுவனங்கள் வழக்குகள் பலவற்றில் இதை வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள். தர்மபுரியில் சரவணனின் மனைவி கலையரசி (வயது 30) திருமணமான 6 மாதங்களில் சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் இறந்துவிடுகிறார். சரவணனின் சகோதரி சசிகலா காவலராகப் பணிபுரிபவர். சசிகலாவின் வகுப்புத்தோழி சேலம் அரசு மருத்துவ மனையில் செவிலியராக வேலைபார்க்கிறார். இந்த வாய்ப்பை பயன்படுத்தி உண்மைகளை மறைத்து அறிக்கை பெறப்படுகிறது. மக்கள் கண்காணிப்பகம் விசாரித்து அறிந்ததில் கலையரசி அடித்துக் கொல்லப்பட்டு பின் தூக்கில் தொங்கவிடப்பட்டு தற்கொலை செய்துகொண்டதாக நம்பவைக்கப்பட்டது தெரிய வந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள கோச்சாம்பள்ளியிலுள்ள வேப்பிலைபட்டி என்னும் ஊரில் தர்மராஜனின் மனைவி கனகராணி (வயது 26) மர்மமான முறையில் டிசம்பர் 15, 2010–ல் இறந்து விடுகிறார். குளத்தில் மூழ்கி இறந்ததாக காவல் துறை கூறுகிறது. பிரிவு 174–ன் கீழ் காவல் துறை வழக்கு பதிவு செய்து RDO விசாரணைக்கு அனுப்பிவைக்கின்றது. காவல்துறை மற்றும் RDO ஆகிய இருவருக்கும் இறந்தவருக்கு நீச்சல் தெரியுமா என்பது பற்றி நினைக்கவே இல்லை. நீண்ட போராட்டத்திற்குப் பின்பு தகவல்பெறும் உரிமை சட்டத்தின் மூலம் சவப்பரிசோதனை அறிக்கை மக்கள் கண்காணிப்பகத்தால் பெறப்படுகிறது. அதில் பரிசோதனை அறிக்கையில் வயிற்றில் தண்ணீரே இல்லை என்பதுவும் உடம்பில் இருந்த காயங்களும் அது தற்கொலை அல்ல, கனகராணி அடித்துக்கொல்லப்பட்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரியவருகிறது.

நான்கு மாதங்களுக்குப் பின்பு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தளிக்கு அருகில் உள்ள தசனப்பள்ளியில் ஒரு குடும்பப்பெண் மர்மமான முறையில் கிணற்றில் மூழ்கி இறந்ததாக போலீஸ் அறிக்கை குறிப்பிடுகிறது. அருகில் வசிப்பவர்கள் மக்கள் கண்காணிப்பகத்திற்கு மெடிலா அவர் கணவர் பால்ராஜ்மற்றும் குடும்பத்தாரால் அடித்து கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கிறார்கள். நீண்ட போராட்டத்திற்குப்பிறகு அந்த நிறுவனம் சவப்பரிசோதனை அறிக்கையைப் பெற முடிந்தது. அதில் நீரில் மூழ்கி இறந்ததற்கான வகையில் அவர் வயிற்றில் தண்ணீர் தென்படவில்லை என்பதோடு உடம்பிலே காயங்களும் இருந்தன.

## பொது அறிக்கையாக சவ அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டும்” – சமூக செயல்பாட்டாளர்

– வி.நாராயணமூர்த்தி

பெரும்பாலான கொலை வழக்குகளில் சாதாரண மனிதர்கள் இறந்திருந்தால் நடத்தப்படும் சவப்பரிசோதனை அறிக்கைகள் நேர்மையானதாக இருக்கலாம். ஆனால் பணக்காரர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் சம்பந்தப்பட்டிருக்கும்போது நேர்மையற்றதாக இருக்க வாய்ப்புண்டு. மிக முக்கிய பிரமுகர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் காவல்துறை சவப்பரிசோதனை செய்யும் மருத்துவர்களிடம் வலியுறுத்தி (மிரட்டியோ) சவப்பரிசோதனை அறிக்கை பெறக்கூடும் என்று மூத்த வழக்கறிஞரான சந்திரசேகரன் கூறுகிறார்.

ஒரு சாவு இயற்கையானதா அல்லது கொலையா என்று ஆய்ந்தறிவதற்கு எளிதான வழி இறந்தபின் குறுகிய காலத்திற்குள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். தாமதம் பலவிஷயங்களை இருட்டடைப்பு செய்து விடவும் மாற்றி எழுத வற்புறுத்தவும் வழிவகுத்துவிடும். சவப்பரிசோதனை அறிக்கைகள் நம்பத்தகுந்த விதத்தில் இல்லாமல் போவதற்கு முக்கியக் காரணம், காவல் துறையினருக்கும் மருத்துவத் தடய நிபுணர்களுக்கும் இடையிலான தொடர்பின் விளைவாக நிகழும். இது சவ ஆய்வு செய்யும் வழிமுறைகளை மாற்றி அமைத்துவிடும் என்று மேலும் சந்திரசேகரன் கூறகிறார். மனித உரிமை வழக்குகளில் வழக்காடும் சிவகுருநாதன் இது பற்றிக் கூறும்போது காவல்துறைத் தடய வல்லுனர்கள் மற்றும் தடய மருத்துவ வல்லுனர்களுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லாமைபற்றிக் கூறி, தடய அறிக்கைகள் தயாராகும் விதத்தில் மாறுதல்கள் வரவேண்டும் என்கிறார். தற்போது தயாராகும் சவ அறிக்கைகள் யாவும் மிகப்பழமையான முறையில் வடிவமைக்கப்பட்ட முறைகளையே பின்பற்றுகின்றன. புதிய தொழில்நுட்பங்கள் மூலமாக சாவுகள் பற்றித் தீர்மானிக்கும் வாய்ப்புகளை பின்பற்ற வேண்டும்.

சவப்பரிசோதனைகள் நேர்மையான முறையில் நடைபெற வேண்டும் என்றால் அந்த பரிசோதனைகள் நடைபெறும்போது வீடியோக்கள் மூலம் கண்காணிக்கப்பட வேண்டும். மேலும் இறந்தவர்களின் நெருங்கிய உறவினர்கள் முன்னிலையில் அது நடத்தப்பட வேண்டும் என்றும் வாதித்தார். சில நோய்க்குறிய ஆய்வு வல்லுனர்கள் மற்றும் இணை ஆய்வாளர்கள் அரசு மருத்துவமனைகளில் தரம் வாய்ந்த கல்வி மற்றும் தகுதியுடைய தடய அறிவியல் பயின்றவர்கள்தான் இயற்கைக்கு மாறான சாவுகளை மேம்பட்ட தொழில்நுட்பத்தின் மூலம் செய்ய அரசு மருத்துவமனைகளில் பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்று கருதுகின்றனர்.

“ஏன் எல்லா சவப்பரிசோதனை அறிக்கைகளும் பொது அறிக்கைகளும் பொது அறிக்கைகளாக அறிவிக்கப்பட்டு எல்லோருக்கும் கிடைக்கும் வாய்ப்பினை அதிலும் சந்தேகம் தோன்றும்போது சரிபார்த்துக்கொள்ளும் வகையில் அமையக்கூடாது”? என்று கேள்வி எழுப்புகின்றார். சமூக செயல்பாட்டாளரான சந்திர சேகரன். இந்த அறிக்கைகள் எல்லாம் இணையதளத்தில் அறிக்கைகளாக குறிப்பிட்டகாலங்களுக்கு வெளியிடப்பட்டால் ஆராய்ந்து உறுதிபடுத்த விரும்புபவர்கள் அனைவரும் உபயோகப்படுத்திக்கொள்ள முடியும் என்று கூறிய அவர் டெல்லி வழக்கு மன்றத்தில் கூறப்பட்ட வழிமுறைகளை மேற்கோள் காட்டினார். மேலும் எல்லா மருத்துவமனைகளிலும் ஒரே சீரான வடிவமைப்புப் பரிசோதனை அறிக்கைகளை மேற்கொண்டால் வெளிப்படைத்தன்மை மிகுந்ததாக இருக்கும் என்று தன்விருப்பத்தையும் கூறினார்.

# கதை கூறும் எண்கள்

**20** தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள்

**17** மாநிலத்தில் சவப்பரிசோதனை செய்யும் தடய மருத்துவர்கள்

**50** பணியிடங்கள் பல்லாண்டுகளாய் காலியாக உள்ளன

**2,000** மாதத்திற்கு ஒவ்வொரு அரசு மருத்துவமனைகளும் பெறும் பரிசோதனைகள்

**7** சென்னையிலுள்ள நான்கு பெரிய மருத்துவமனையிலுள்ள மருத்துவர்கள்

# தனி நபர் வாக்குமூலம்

**சென்னை , செப்டம்பர் 17, 2009**

கப்பலோட்டியாக வேலைபார்த்து ஒய்வு பெற்ற இளங்கோவன் (வயது 69) மற்றும் அவரது மனைவி ரமணி (வயது61) இருவரும் பனையூரில் சுட்டுக் கொல்லப்பட்டதாக போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது. குற்றம் சாட்டப்பட்ட இராஜன் விஸ்கி குடித்த போதையில் துப்பாக்கியில் சுட்டதாக போலீஸ் கூறுகிறது. "அவருடைய கல்லீரலில் மது காணப்பட்டதாக" சவப்பரிசோதனை அறிக்கை கூறியது .

**சென்னை, மார்ச்12, 2011**

வண்ணாரப்பேட்டையிலுள்ள காவலர் (காவல்துறை) உலகநாதனின் வீட்டில் வீட்டு வேலை செய்த 14 வயது பணிப்பெண்னின் உடல் தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டாள். அந்த வழக்கு தற்கொலை என்று முடிவு செய்யப்பட்டு அவள் உடம்பு புதைக்கப்பட்டது. அதன்பின் அவளின் பெற்றோர்கள் உயர்நீதிமன்றத்தை நாடியதில் புதைக்கப்பட்ட பிணத்தை தோண்டி எடுத்து இரண்டாவது சவப்பரிசோதனை செய்ய ஆணையிடப்பட்டது.

**கிருஷ்ணகிரி, டிசம்பர்15, 2010**

வேப்பிலைபட்டியை சார்ந்த கனகராணி (வயது 26) மர்மமான முறையில் இறந்தார். ஏரியில் மூழ்கி இறந்ததாக போலீஸ் கூறியது. கனகராணிக்கு நீச்சல் தெரியும் என்பதை போலீஸ் அறிக்கையில் கூறப்படவில்லை. சவப்பரிசோதனை அறிக்கையில் கனகராணியின் வயிற்றில் தண்ணீர் இல்லை என்பது குறிப்பிடப்படாதது வழக்கின் திருப்பு முனையாக அமைந்தது.

**Courtesy – The New Indian Express (July 2011)**

**The new indian express**
**chennai Monday 25 July 2011**





*Illustration :*
***Amit Bandre***

# பரமக்குடி துப்பாக்கிச் சூட்டில் 6 தலித்கள் பலி: உண்மை அறியும் குழு அறிக்கை

**– 21.9.2011, மதுரை**

**கடந்த செப்டம்பர் 11, 2011 அன்று பரமக்குடி ஐந்து முக்குச்சாலையில் தமிழக காவல்துறை நடத்திய துப்பாக்கிச்சூடு மற்றும் தடியடியில் 6 தலித்கள் கொல்லப்பட்டும், சுமார் 30க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றும் உள்ளதை பல்வேறு அரசியல் கட்சிகளும், மனித உரிமை அமைப்பினரும் கண்டித்துள்ளனர். இதுதொடர்பாக பல்வேறு மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் கொண்ட உண்மை அறியும் குழு ஒன்று கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டது.**

**உறுப்பினர்கள்**

1. பேரா.அ.மார்க்ஸ் – மனித உரிமைகளுக்கான மக்கள் கழகம் (PUHR), சென்னை
2. கோ.சுகுமாரன் – மக்கள் உரிமை கூட்டமைப்பு (FPR), புதுச்சேரி
3. வழக்குரைஞர் ஏ. முஹம்மது யூசுப் – NCHRO, தமிழ்நாடு
4. வழக்குரைஞர் ரஜினி – PUHR, மதுரை
5. பேரா. ஜி.கே.ராமசாமி – மக்கள் ஜனநாயக மன்றம் (PDF), கர்நாடகா
6. வழக்குரைஞர் கார்த்திக் நவயான் – தேசிய தலித் முன்னணி (NDF), ஆந்திர மாநிலம்
7. ரெனி அய்லின்– தேசிய ஒருங்கிணைப்பாளர், NCHRO, கேரளம்.
8. பேரா. பிரபா. கல்விமணி – மக்கள் கல்வி இயக்கம், திண்டிவனம்
9. பி.எஸ். ஹமீது – SDPI, தமிழ்நாடு
10. பேரா. சே. கோச்சடை – மக்கள் சிவில் உரிமைக் கழகம் (PUCL), காரைக்குடி
11. ஏ. சையது ஹாலித் – பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா, இராமநாதபுரம்
12. மு. சிவகுருநாதன் – PUHR, திருவாரூர்
13. கவிஞர் குட்டி ரேவதி – ஆவணப்பட இயக்குநர், சென்னை
14. முனைவர் தி. பரமேஸ்வரி – கவிஞர், காஞ்சிபுரம்
15. கு. பழனிச்சாமி – PUHR, மதுரை
16. வழக்குரைஞர் முஹம்மது சுஹைப் செரீஃப் – NCHRO, கர்நாடகம்
17. வழக்குரைஞர் தய். கந்தசாமி – தலித் பண்பாட்டுப் பேரவை, திருத்துறைப்பூண்டி
18. தகட்டூர் ரவி – PUHR, கல்பாக்கம்

இக்குழு செப்டம்பர் 19, 20 ஆகிய தேதிகளில் பரமக்குடி, சுற்றுவட்ட கிராமங்கள், இராமநாதபுரம், மதுரை ஆகிய பகுதிகளுக்குச் சென்று சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களையும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவர்களையும், அரசு அதிகாரிகளையும், பொதுமக்களையும் சந்தித்து, விரிவாக அவர்களிடம் பேசி அவற்றை ஒலி – ஒளி நாடாக்களில் பதிவு செய்து கொண்டது. முதல் தகவல் அறிக்கைகள், காவலில் வைக்கப்பட்டோருடைய விவரங்கள் ஆகியவற்றையும் தொகுத்துக் கொண்டது.

**கல்வி மற்றும் ஜனநாயக உணர்வுகள் வளர்வதன் ஊடாக மேலெழும் அடித்தள மக்களின் அடையாள உறுதிப்பாட்டை ஆதிக்க சமூகமும், ஆதிக்க சமூகத்தின் மனநிலையைப் பிரதிபலிக்கும் அரசும் ஏற்காததன் உச்சகட்ட வெளிப்படையாகவே இன்று துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது.**

**பின்னணி**

பரமக்குடி, கமுதி, இராமநாதபுரம் முதலானவை சாதி முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ள பகுதிகள். கடந்த 50 ஆண்டுகளாகவே இங்கு பல கலவரங்கள் நடைபெற்று வருகின்றன. 1957ல் நடைபெற்ற முதுகுளத்தூர் கலவரம் அனைவரும் அறிந்த ஒன்று. அப்போது கொலை செய்யப்பட்ட இம்மானுவேல் சேகரன் அப்பகுதி தேவேந்திரகுல வேளாளர்களின் வணக்கத்திற்குரிய பெருந்தலைவராக (icon) உருப்பெற்றுள்ளார். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் எப்படி தேவர்கள் மத்தியில் ஒரு

திருஉருவாக உருப்பெற்றுள்ளாரோ அதே வடிவில் தேவேந்திரர்களுக்கு இம்மானுவேல் சேகரன் உருவாகியுள்ளார்.

முத்துராமலிங்கத் தேவருடைய குருபூஜை அவர்களது சமூகத்தவர்களால் அவரது பிறந்த நாளன்று பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. 'தெய்வத்திருமகனார்' என அவர் வழிபடப்படுகிறார். இப்பகுதியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தேவேந்திரர்கள் வசிக்கின்றனர். கல்வி முதலிய வளர்ச்சிகளின் விளைவாக இம்மானுவேல் சேகரனின் காலம் தொடங்கி அமைப்பு ரீதியாக ஒருங்கு திரளும் போக்கு இவர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. ஒடுக்குமுறையை ஏற்காத மனநிலையும், அடையாளத்தை உறுதி செய்து கொள்ளும் சுயமரியாதைப் போக்கும், அதற்குரிய வகையில் வரலாற்று உருவாக்கமும் நடைபெற்று படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதனை இதுகாறும் ஆதிக்கம் செய்து வந்த சாதியினரும், அரசு எந்திரமும் சகித்துக்கொள்ளாத நிலையின் விளைவாக சமூக முரண்கள் கூர்மையடைகின்றன.

கல்வி மற்றும் ஜனநாயக உணர்வுகள் வளர்வதன் ஊடாக மேலெழும் அடித்தள மக்களின் அடையாள உறுதிப்பாட்டை ஆதிக்க சமூகமும், ஆதிக்க சமூகத்தின் மனநிலையைப் பிரதிபலிக்கும் அரசும் ஏற்காததன் உச்சகட்ட வெளிப்படையாகவே இன்று துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது.

1987 முதல் பூ. சந்திரபோஸ் அவர்களின் தலைமையிலான 'தியாகி இம்மானுவேல் பேரவை' என்கிற அமைப்பு இம்மானுவேல் சேகரனின் நினைவு நாளை (செப்டம்பர் 11 ) கொண்டாடத் தொடங்குகிறது. ஆண்டுக்காண்டு கூடுகின்ற கூட்டத்தின் அளவும் அதிகரிக்கிறது. 1995–97ல் தென்மாவட்ட சாதிக்கலவரங்கள் ஏற்படுகின்றன. 'புதிய தமிழகம்' கட்சியும் இங்கே வேர் பதித்துச் செயல்படத் தொடங்குகிறது. இப்பகுதியில் தேவேந்திரர்கள் முக்கியத் தலைவர்களாக ஜான்பாண்டியன் முதலானோர் உருப்பெருகின்றனர்.

இதே காலகட்டத்தில் தேவர் குருபூஜை, அரசே பங்கேற்று நடத்தக்கூடிய விழாவாக மாறுகிறது. 2007ல் தேவருடைய மறைவின் 50வது நினைவு நாளை ஒட்டி அவரது நினைவிடத்திற்கு அருகில் வசித்துக் கொண்டிருந்த சுமார் 100 தேவேந்திரர்களின் குடும்பங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டன. அரசே முன்னின்று இதைச் செய்தது.
இம்மானுவேல் சேகரனின் நினைவு நாளும் இதேபோல பெரிய அளவில் கொண்டாடப்படுவதை ஆதிக்க மனங்கள் ஏற்க மறுத்தன. தங்களைப் போலவே தேவேந்திர குலத்தினரும் இம்மானுவேல் சேகரனின் நினைவு நாளை 'குருபூஜை' என அழைப்பதையும் அவர்கள் ஏற்கவில்லை. 2007 தொடங்கி ஆகஸ்ட் – செப்டம்பர் – அக்டோபர் ஆகிய மாதங்களில் ஏதேனும் ஒரு வன்முறையை தேவேந்திரர்கள் மீது ஏவும் போக்கு இருந்துள்ளது. 2007ல் வின்சென்ட் என்பவரும் 2009ல் அறிவழகன் என்பவரும், சென்ற ஆண்டு (2010 ஆகஸ்ட் 30) ''குருபூஜைக்கு அணி திரள்வீர்'' என சுவரெழுத்துக்கள் எழுதிய கொந்தகை அரிகிருஷ்ணனும் ஆதிக்கச் சாதியினரால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

**2010-11 கல்வியாண்டில் மண்டல மாணிக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயின்ற 28 தலித் பிள்ளைகளில் இவ்வாண்டு 23 பேர் இவ்வாறு டி.சி. பெற்றுச் சென்றுள்ளனர்.**

இந்த ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தேவேந்திரர்களின் அரசியல் கட்சியாக அடையாளம் காணப்பட்டுள்ள புதிய தமிழகத்தைச் சேர்ந்த இருவர் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நீண்ட நாள் சிறையிலிருந்த ஜான்பாண்டியனும் விடுதலையடைந்தார். இவையெல்லாம் தேவேந்திரர்கள் மத்தியில் ஒரு எழுச்சியை வேறு எப்போதைக் காட்டிலும் அதிகமாக ஏற்படுத்தியுள்ளது. சென்ற ஆண்டு (2010) இம்மானுவேல் சேகரனின் குரு பூஜையில் பங்கேற்ற அ.இ.அ.தி.மு.க தலைவர் நயினார் நாகேந்திரன் நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இம்மானுவேல் சேகரனின் நினைவு நாளை அரசு விழாவாக நடத்துவோம் என அறிவித்ததும், 2010 அக்டோபர் 9 அன்று இம்மானுவேல் சேகரனின் உருவம் பொறித்த தபால் தலை வெளியிடப்பட்டதும் தேவேந்திரர்கள் மத்தியில் மிகுந்த எழுச்சியையும் நிறைந்த எதிர்பார்ப்புகளையும் ஏற்படுத்தியிருந்தது. ஆதிக்க சாதியினர் இதை மிகவும் வெறுப்புடன் பார்த்து வந்தனர். ஆப்ப நாடு மறவர் சங்கம் வெளியிட்டுள்ள ஒரு சுற்றறிக்கையில் இவ்வாறு இம்மானுவேல் சேகரனின் குருபூஜை முத்துராமலிங்கத்தேவரின் குருபூஜைக்குச் சமமாக மேலெழுந்து வருவதைத் தடுக்க வேண்டுமென கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பூலித்தேவனுக்குச் சமமான மன்னராக ஒண்டி வீரனை அருந்ததியர்கள் முன்னிறுத்துவதை நடராஜன் (சசிகலா) முதலானோர் கண்டித்து வருவது இத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது.

இந்தப் பின்னணியில் தான் செப்டம்பர் 9ம் தேதியன்று கமுதிக்கு அருகில் உள்ள மண்டல மாணிக்கம் கிராமத்தை ஒட்டிய பள்ளப்பச்சேரி எனும் தலித் கிராமத்தைச் சேர்ந்த பழனிக்குமார் என்கிற 16 வயது தேவேந்திரர் குலச் சிறுவன் கொடுமையாக வெட்டிக் கொல்லப்பட்டான். இது தொடர்பாக தேவர் சாதியைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டனர். கொல்லப்பட்ட சிறுவனுக்கு அஞ்சலி செலுத்த வந்த ஜான்பாண்டியன் தடுக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டார்.

**துப்பாக்கிச் சூடு நடந்து ரொம்ப நேரத்திற்கு பிறகு உள்துறை அமைச்சகத்திடமிருந்து வந்த செய்தி மூலமாகவே தான் அதைத் தெரிந்து கொண்டதாக மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.சகாயம் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.**

இதே நேரத்தில் ( செப்டம்பர் 7 ) அரசுப் போக்குவரத்து கழக பட்டியல் சாதித் தொழிற்சங்கத்தினர் “தேசியத் தலைவர் தெய்வத் திருமகனார்'' என இம்மானுவேல் சேகரனை விளித்து, பிளக்ஸ் போர்டு ஒன்றை பரமக்குடி நகரத்தில் வைத்தனர். உடனடியாக இதனை எதிர்த்து 'மறத்தமிழர் சேனை' என்கிற அமைப்பும் தேவர் சாதியைச் சேர்ந்த வழக்குரைஞர்களும் களம் இறங்கினர். காவல்துறை மற்றும் வருவாய்த் துறையினருக்கு அழுத்தம் கொடுத்தனர். தெய்வத் திருமகனார் என்கிற அடைமொழியைத் தேவருக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இம்மானுவேல் சேகரனுக்குப் பயன்படுத்தக்கூடாது என்று அவர்கள் புகார் செய்தனர். இது பட்டியல் சாதியினரின் சட்டப்பூர்வமான உரிமை என்று கூறி பாதுகாப்பளித்திருக்க வேண்டிய ரெவின்யூ நிர்வாகமும், காவல்துறையும் பட்டியல் சாதி அமைப்பினரை வரவழைத்து, அந்த ஃப்ளக்ஸ் போர்டிலுள்ள இவ்வார்த்தைகளை நீக்க வேண்டுமென வற்புறுத்தின. அவர்களும் பணிந்து அச்சொற்களை நீக்கினர். இது தேவேந்திரர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தவே தெய்வத்திருமகனார் என இம்மானுவேல் சேகரனை விளித்து பல பிளக்ஸ் போர்டுகளை ஆங்காங்கு அடுத்தடுத்த நாட்களில் அவர்கள் நிறுவினர். இதைக் கண்டு இப்போது ஆதிக்க சாதியினர் மட்டுமல்ல, காவல்துறையும் அரசு நிர்வாகமும் சேர்ந்து ஆத்திரமடைந்தது. பரமக்குடியிலுள்ள எந்த ஃப்ளக்ஸ் போர்டு அச்சகமும் இதுபோன்ற ஃப்ளக்ஸ் போர்டுகளை அச்சிடக்கூடாதென என காவல்துறை மிரட்டியது.

இந்தப் பின்னணியில் தான் செப்டம்பர் 11 அன்று இம்மானுவேல் சேகரன் நினைவு நாளில் அவரது சமாதிக்கு அஞ்சலி செலுத்த வந்த மக்களுக்கும் காவல் துறைக்கும் இடையில் முரண்பாடு எழுந்து, துப்பாக்கிச் சூட்டில் 6 அப்பாவி உயிர்கள் பலியாகவும், ஏராளமானோர் படுகாயமடையவும் நேரிட்டது.

## செப்டம்பர் 11 துப்பாக்கிச் சூடு குறித்த நாங்கள் அறிந்த உண்மைகள்

1. துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தி துப்பாக்கிச் சூட்டை விடவும் கொடுமையான மொழியில் சட்டமன்றத்தில் உரையாற்றிய முதல்வர் ஜெயலலிதா இரண்டு தவறான தகவல்களைக் கூறியுள்ளார். அவை:

(அ). முத்துராமலிங்கத் தேவரை இழிவு செய்து மண்டல மாணிக்கம் கிராமச் சுவற்றில் எழுதியதாலேயே பழனிக்குமார் கொல்லப்பட்டான் என்றது. இது உண்மையல்ல. மண்டல மாணிக்கம் தேவர் சாதி ஆதிக்கம் உச்சமாக உள்ள ஒரு ஊர். இதன் காரணமாகவே இந்த கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளியில் பயில்கிற தேவேந்திரர் குலப் பிள்ளைகள் மாற்றுச் சான்றிதழ் பெற்றுக்கொண்டு வேறு ஊர்களில் உள்ள பள்ளிகளில் சேர்கின்றனர். 2010–11 கல்வியாண்டில் மண்டல மாணிக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயின்ற 28 தலித் பிள்ளைகளில் இவ்வாண்டு 23 பேர் இவ்வாறு டி.சி. பெற்றுச் சென்றுள்ளனர். இக்கிராமத்தில் தலித் மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக உலவக்கூட முடியாத நிலையில் வேற்றூரில் படிக்கக்கூடிய 16 வயது சிறுவன் பழனிக்குமார் அங்கு சென்று ஏழரை அடி உயரமுள்ள ஒரு சுவற்றில் தேவரை இழிவு செய்து எழுதினான் என்று சொல்வதை யாரும் ஏற்க இயலாது.

(ஆ) ஜான் பாண்டியன் இந்த கிராமத்திற்கு படை திரட்டிச் சென்றதால் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டி வந்தது என்பது முதல்வர் சொன்ன இரண்டாவது பொய். ஜான் பாண்டியனைப் பொருத்தமட்டில் அன்று தூத்துகுடியில் நடைபெற்ற ஒரு பூப்பு நீராட்டு விழாவிற்கு வருகிறார். இம்மானுவேல் சேகரன் நினைவு நாளுக்கு அவர் செல்லக்கூடாதென இராமநாதபுரம் ஆட்சியர் தடையுத்தரவு இட்டதை அறிந்து அவர் திரும்பவும் திருநெல்வேலி செல்கிறார். அப்போது அவர் கைது செய்யப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள துப்பாக்கி சுடும் பயிற்சி பள்ளியில் வைக்கப்படுகிறார். எவ்வகையிலும் நிர்வாகம் மற்றும் காவல் துறையின் உத்தரவுகளை மீறுவது என்கிற முனைப்பு

ஜான்பாண்டியனிடம் இருக்கவில்லை என்பதே உண்மை. தடையை மீறி அவர் படைதிரட்டிச் சென்றதாக முதல்வர் கூறியுள்ளது, அதிகாரிகளின் கூற்றை அவர் அப்படியே ஏற்றுக்கொண்டதையே காட்டுகிறது.

2. செப்டம்பர் 11 அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு முழுக்க முழுக்கக் காவல் துறையின் திட்டமிட்ட செயலாகத் தெரிகிறது. தேவேந்திரர்களின் ஓர் அடையாளத் திருவிழாவாக மாறிப்போன ஒரு நாளில், அஞ்சலி செலுத்த வந்த அவ்வினத் தலைவர் ஒருவரைத் தடுத்தது ஒரு முட்டாள்தனமான செயல் மட்டுமல்ல; கலவரத்தைத் தூண்டக்கூடிய செயலும் கூட. தவிரவும், தடுத்தவுடன் பணிந்து திரும்பியவரைக் கைது செய்து, இது குறித்த செய்தி அஞ்சலி செலுத்த வந்த மக்கள் மத்தியில் பரவக் காரணமாக இருந்தது இன்னொரு மிகப்பெரிய வன்முறையைத் தூண்டும் செயலாக அன்று அமைந்துள்ளது.

**தலித் கிராமங்கள் பலவும் கடுமையாக அரசால் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையை நாங்கள் நேரில் கண்டோம். எடுத்துக்காட்டாக, கொல்லப்பட்ட பழனிக்குமாரின் பள்ளப்பச்சேரி கிராமத்தில் குடிநீர் வசதி, சாலை வசதி ஏதமில்லை.**

3. டி.ஐ.ஜி சந்தீப் மிட்டல், ஐந்து முக்கில் பொறுப்பாக நிறுத்தி வைக்கப்பட்ட சென்னை அடையாறு காவல் துறை ஆணையர் செந்தில்வேலன், பரமக்குடி நகர காவல் ஆய்வாளர் சிவக்குமார் ஆகியோர் அன்று தேவேந்திரர்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் பாடம் புகட்டியே தீரவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் வந்து நின்றதாகவே தெரிகிறது. தியாகி இம்மானுவேல் சேகரன் பேரவைத் தலைவர் பூ.சந்திரபோஸ் அவர்கள் மிகுந்த நல்லெண்ணத்துடன் அதிகாரிகளை அணுகி ஜான் பாண்டியனை அன்று கைது செய்தது நல்லதல்ல எனவும், அவரை விடுதலை செய்து சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டும் எனவும் கோரியபோது, ‘‘சட்டம் ஒழுங்கு பற்றி நீங்கள் பேச வேண்டாம்’’ முதலில் அவர்களைக் கலைந்து போகச்சொல்லுங்கள்’’ என சந்தீப் மிட்டல் கூறி எந்தவித சமாதானத்திற்கும் வாய்ப்பளிக்காமல் நடந்துள்ளார்.

4. ஐந்து முக்கில் அன்று குவிக்கப்பட்டிருந்த காவல்துறையினரின் எண்ணிக்கை சுமார் 2000 என நேரில் பார்த்த பலரும் எங்களிடம் கூறினர். சாலை மறியலுக்கு அமர்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 50 தொடங்கி அதிகபட்சமாக 200 அல்லது 300 என்ற அளவிலேயே இருந்துள்ளது. கூட்டம் அதிகமாக வரும் என எதிர்பார்த்து அவ்வழியே போக்குவரத்து முன்னதாகவே தடை செய்யப்பட்டது என்பதை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அருண்ராயே எங்களிடம் ஒத்துக்கொண்டார். தவிரவும் அவ்வழியே இதர மக்கள் சென்று அஞ்சலி செலுத்தி வரவும் அவ்வழியே வந்த வாகனங்கள் சென்று வரவும் சாலை மறியலால் எவ்விதத் தடையும் ஏற்பட்டிருக்கவில்லை. இந்நிலையில் 2000 ஆயுதம் தாங்கிய காவல்துறையினர் கூடியிருந்த 200 மக்களை, அவர்கள் உண்மையிலேயே கல்லெறிந்து வன்முறையில் ஈடுபட்டிருந்தால் கூட லேசான தடியடி அல்லது கண்ணீர்ப்புகையைப் பிரயோகித்துக் கலைத்திருக்க முடியும். ஆனால் எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி துப்பாக்கிச்சூட்டை நடத்தி 6 பேரைக் கொன்றுள்ளனர் சந்தீப் மிட்டல், செந்தில் வேலன், சிவக்குமார் ஆகியோர் தலைமையில் இருந்த காவல் துறையினர்.

5. செந்தில் வேலன் ஐ.பி.எஸ் ஏற்கனவே இதே பகுதியில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக இருந்தவர். அவர் இங்கு பணியாற்றியபோது இதே போல் இம்மானுவேல் சேகரனின் நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத்த வந்தவர்களை நியாயமற்ற முறையில் கைது செய்து (2008 செப்டம்பர் 11) தலித் விரோத அதிகாரி என்கிற பெயரை ஈட்டியவர். இவரை அடையாற்றில் இருந்து இங்கு கொண்டுவந்து அன்றைய தினத்தில் ஐந்து முக்கில் நிறுத்தியதும் உள்நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகவே தெரிகிறது.

6. காவல்துறையின் ’வஜ்ரா’ வாகனத்தைக் கலவரக்காரர்கள் எரித்தனர் என்று சொல்வதையும் நம்ப இயலவில்லை. ஐந்து முக்கில் சாலை மறியல் செய்து கொண்டிருந்தவர்களைக் கலைப்பதற்குக் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட காவல்துறையினர் மதுரை–இராமநாதபுரம் சாலையில் நீளவாக்கில் நின்றிருந்தனர். தடியடி மற்றும் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டவுடன் மக்கள் எதிரே உள்ள முதுகுளத்தூர் சாலையில் ஓடுவது மட்டுமே அன்று சாத்தியமாக இருந்தது. இந்நிலையில் காவல்துறை அணிவகுப்பிற்குப் பின்னால் வந்து நின்ற வஜ்ரா வாகனத்தை கலவரக்காரர்கள் எரித்தனர் என்று சொல்வது ஏற்கத்தக்கதாக இல்லை.

7. துப்பாக்கிச் சூட்டின்போது அங்கு நின்று நெற்றிப்பொட்டில் குண்டடிப்பட்டு, இன்று மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மாணிக்கம், குண்டடிபட்டு இறந்த ஒருவரை தூக்கிச்சென்று காப்பாற்ற முயன்ற மணிநகர் அம்பேத்கர் இளைஞர் மன்றச் செயலாளர் சுரேஷ், கடுமையாக அடிக்கப்பட்டு இன்று இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் வெள்ளைச்சாமி உள்ளிட்ட பலரும் எம்மிடம் நேரில் கூறியதிலிருந்து, அன்று எந்தவித முன்னெச்சரிக்கையும் இன்றி தண்ணீர் பீச்சியடித்தல், கண்ணீர்ப்புகை பிரயோகம் முதலிய முன் நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளாமல் திடீரென்று துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். அதே நாளில் மதுரை சிந்தாமணி அருகே நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து இன்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் திரு.வைகோ அவர்களால் மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் 19 வயதான டி.ஜெயபிரசாந்தும் அவ்வாறே கூறினார்.

துப்பாக்கிச் சூடு நடந்து ரொம்ப நேரத்திற்கு பிறகு உள்துறை அமைச்சகத்திடமிருந்து வந்த செய்தி மூலமாகவே தான் அதைத் தெரிந்து கொண்டதாக மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.சகாயம் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. பல நிமிடங்கள் கழித்தே தானும் தெரிந்து கொண்டதாகத்தான் இராமநாதபுர மாவட்ட ஆட்சியரும் எங்களிடம் தெரிவித்தார்.

8. துப்பாக்கிச் சூட்டையும் தடியடியையும் மேற்கொண்ட காவல் துறையினரும் அதிகாரிகளும் கடும் தலித் விரோதப் போக்குடன் இருந்துள்ளனர். சாதியைச் சொல்லி இழிவாகப் பேசிய வண்ணமே அவர்களை அடித்தும் சுட்டும் வீழ்த்தியுள்ளது பற்றி எம்மிடம் பலரும் முறையிட்டனர். இது அரசு நிர்வாகத்தின் மேல்சாதி ஆதரவு மனப்பான்மை, தலித் விரோதப் போக்கு, தலித்கள் என்றாலே கலவரம் செய்யக்கூடியவர்கள் என்கிற எண்ணத்துடன் அவர்கள் செயல்படுவது ஆகியவற்றிற்குச் சான்றாக உள்ளது.

9. துப்பாக்கிச் சூட்டில் பல்லவராயனேந்தல் கணேசன் (55), வீராம்பலைச் சேர்ந்த பன்னீர்செல்வம் (50), மஞ்சூரைச் சேர்ந்த ஜெயபால் (19), கீழ்க்கொடுமாநல்லூர் தீர்ப்புக்கனி (25), காட்டு பரமக்குடியைச் சேர்ந்த முத்துகுமார் (25), காக்கனேந்தல் வெள்ளைச்சாமி (55) ஆகிய ஆறு பேர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கணேசன், வெள்ளைச்சாமி, ஜெயபால் ஆகிய மூவரின் இல்லங்களுக்கும் சென்று அவர்களது உறவினர்களைச் சந்தித்தோம். இவர்கள் அனைவருமே அந்த நேரத்தில் அங்கு வந்து சிக்கிக்கொண்டவர்களே அன்றி, அஞ்சலி செலுத்தும் நோக்குடன் வந்தவர்களோ ஜான் பாண்டியனின் அமைப்பைச் சேர்ந்தவர்களோ அல்ல. கணேசன் தன் மகளின் திருமண அழைப்பிதழை விநியோகிக்கச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைக் கலகம் செய்ய வந்தவர்கள் என காவல்துறை கூறுவதை ஏற்க இயலாது. பெரும்பாலான துப்பாக்கிச் சூடு இடுப்புக்கு மேலேயே நடத்தப்பட்டுள்ளது. மாணிக்கம் நெற்றிப்பொட்டில் சுடப்பட்டுள்ளார்.

10. சுடப்பட்டவர்களில் சிலர் முறையான சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் காப்பாற்றப்பட்டிருக்கலாம். இன்று இறந்து போயுள்ள தீர்ப்புக்கனி உயிரிருக்கும் போதே பிணவறையில் கொண்டுவந்து போடப்பட்டுள்ளார். பிணவறையில் உயிருடன் இருந்த குமார் என்பவர் காப்பாற்றப்பட்டுள்ளார். அதற்குள் தீர்ப்புக்கனி இறந்துள்ளார். தவிரவும் கொல்லப்பட்டவர்களில் குறைந்தபட்சம் இரண்டு பேரேனும் காவல்துறையினரால் அடித்துக்கொல்லப்பட்டு பின்பு சுடப்பட்டனர் என்ற ஐயம் பலருக்கும் உள்ளது. வெள்ளைச்சாமியின் உடலைக் கொண்டு வந்த காவல் துறையினர் அவரின் உடலை விரைவாக எரிக்கச் சொல்லி உறவினர்களைக் கட்டாயப்படுத்தியுள்ளனர். அவர்களும் அச்சத்தில் அவ்வாறே செய்துள்ளனர். அவரின் உடலில் குண்டுக்காயம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை எனவும் அவருடைய உறவினர்கள் எம்மிடம் தெரிவித்தனர். இறந்து போன ஜெயபாலின் காலிலும் கூட துப்பாக்கிக் கட்டையால் அடித்து உடைத்தது போன்ற காயம் இருந்ததாக அவரது மாமியார் குறிப்பிட்டார். இவையெல்லாம் மக்களின் சந்தேகத்தில் உண்மை இருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

11. குண்டடிபட்டு இறந்துபோன ஜெயபால் மற்றும் அப்பல்லோவில் சிகிச்சை பெற்றுவரும் ஜெயபிரசாந்த் ஆகியோருக்கு குண்டுக்காயம் முதுகுப்புறத்திலிருந்தே தொடங்குகிறது. அவர்கள் தப்பி ஓடும்போது காவல் துறையினர் சுட்டிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

12. காயம்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்–களுக்கு மதுரை அரசு மருத்துவமனையில் உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை. நெற்றியில் குண்டடிபட்ட மாணிக்கம், ஜெயபிரசாந்த் ஆகியோர் இதை எம்மிடம் கூறினார். ஸ்கேன் எடுப்பது முதலான ஒவ்வொன்றிற்கும் ஜெயபிரசாந்த்திடம் கட்டணம்

வசூலிக்கப்பட்டுள்ளது. ''வைகோ அய்யாதான் என் மகனின் உயிரைக் காப்பாற்றினார்'' என்று அவரது பெற்றோர்கள் எம்மிடம் புலம்பினர். நீதிமன்றத்தை அணுகி இன்று மாணிக்கம், கார்த்திக் ராஜா ஆகிய இருவரும் மதுரை அப்பல்லோவில் சிகிச்சை பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்...

1. சுமார் 10 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. யாரை வேண்டுமானாலும் கடுமையான குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யத்தக்கதாக இந்த முதல் தகவல் அறிக்கைகள் எழுதப்பட்டள்ளன. 1500 பேருக்கு மேல் கைது செய்ய இருப்பதாக காவல்துறை திட்டமிட்டுச் செய்திகளை ஊடகங்களில் பரப்பி மக்கள் மத்தியில் பீதியை ஊட்டுகிறது. தவிரவும், அவ்வப்போது கிராமங்களுக்குச் சென்று பேருந்து முதலிய பொதுச்சொத்துக்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டிற்காக கைது செய்ய ஆட்களைக் கொடுங்கள் எனவும் காவல் துறையினர் மிரட்டுகின்றனர். பரளை என்ற கிராமத்திலிருந்து வந்த நாகவல்லி, ரேணுகாதேவி உள்ளிட்ட பெண்கள் செப்டம்பர் 18ம் தேதியன்று ஒரு போலீஸ் வேனில் வந்த காவல் துறையினர் இவ்வாறு மிரட்டியதை எம்மிடம் குறிப்பிட்டனர். தவிரவும், சாதாரண உடையில் வந்த போலீசார் சீருடையிலிருந்த போலீசாரை நோக்கிக் கற்களை வீசித்தாக்குவது போல பாவனை செய்து வீடியோ படம் எடுத்ததாகவும் எம்மிடம் குறிப்பிட்டனர். நயினார்கோயில், பரமக்குடி, முதுகுளத்தூர், இராமநாதபுரம் ஆகியவற்றைச் சுற்றியுள்ள சுமார் 50 கிராமங்களில் இரவில் ஆண்கள் பயந்து வீட்டில் தங்காத நிலை இன்று உள்ளது. எஸ்.காவனூர் என்கிற ஊரில் இருந்த அடிபட்ட ஒருவரைக் காண இரவு 8 மணி வாக்கில் நாங்கள் வாகனங்களில் சென்றதைக் கண்ட அக்கிராமத்திலுள்ள அத்தனை ஆண்களும், வருவது காவல்துறையோ என அஞ்சி ஓடியதை நாங்கள் நேரில் கண்டோம்.

2. தொடக்கத்தில் இரவு நேரத்தில் இவ்வாறு கிராமங்களுக்குச் சென்று மிரட்டினோம் எனவும், பின்னர் அதை நிறுத்திக் கொண்டதாகவும் எம்மிடம் விரிவாகப் பேசிய இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அருண்ராய் கூறினார். ஆனால் மறுபடியும் பேருந்துகள் மீது கல்வீச்சுகள் நடந்ததால் அப்படிச் செய்ய வேண்டி இருந்தது எனவும், இனி அப்படி நடக்காது எனவும் அவர் எங்களிடம் குறிப்பிட்டார்.

3. 21 பேர் இன்று ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளனர். வேறு யாரும் கைது செய்யப்படவில்லை. ஆனால் பலர் பிடித்துச் செல்லப்பட்டு, அடித்து பின்னர் விடப்பட்டுள்ளனர். மற்றபடி நகர்புறங்களில் 144 தடை உத்தரவு இருந்த போதிலும் பெரிய கெடுபிடிகள் இல்லை. எங்கள் குழு சென்று வருவதற்கும், மக்களைச் சந்திப்பதற்கும் பெரிய தடை எதுவும் இருக்கவில்லை. எனினும், பெரிய அளவில் பரமக்குடி பகுதியில் காவல் துறையினர் குவிக்கப்பட்டிருப்பது, வருவோர் போவோர் அனைவரும் வீடியோவில் பதிவு செய்யப்படுவது முதலான நிகழ்வுகள் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை தொடர்ந்து ஏற்படுத்தியுள்ளது.

4. இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 இலட்சம் மட்டும் அரசால் வழங்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களுக்கு ரூ.15000 கொடுக்கப்பட்டுள்ளது. பலர், அந்தத் தொகை இன்னும் தங்களுக்கு வந்து சேரவில்லை என எங்களிடம் குறிப்பிட்டனர். இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு தி.மு.க சார்பாக 1 இலட்சமும், காங்கிரஸ் கட்சி சார்பாக ரூ.50,000மும் கொடுக்கப்பட்டுள்ளது.

### கோரிக்கைகள்

1. சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்திப் பேசியது வன்மையாக கண்டிக்கத்தக்கது. கடும் தலித் விரோதப்போக்குடனும், உயர்சாதி ஆதிக்க ஆதரவுப் போக்குடனும் அது வெளிப்பட்டுள்ளது. இது தலித் மக்கள் மத்தியில் தமக்கு எந்தவிதமான நீதியும் கிடைக்காது என்ற அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது. முதல்வர் தம் பேச்சிற்கு வருத்தம் தெரிவித்து, அதைத் திரும்பப் பெற வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்த இது உதவும்.

2. துப்பாக்கிச் சூடு குறித்து அரசு நியமித்துள்ள ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணை வெறும் கண்துடைப்பே. இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நீதியும் கிடைக்காது. பணியில் உள்ள நீதிபதி ஒருவரின் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட வேண்டும்.

3. தாக்குதல் நடத்திய போலீஸ் அதிகாரிகளிடமே புலன் விசாரணையை அளித்திருப்பது கேலிக்குரியது. சி.பி.ஐ விசாரணை ஒன்று உயர்நீதிமன்ற மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4. சந்தீப் மிட்டல், செந்தில் வேலன், சிவக்குமார் ஆகிய காவல் துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, அவர்கள் மீது வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட வேண்டும்.

5. இறந்தவர்களின் குடும்பத்திற்கு அளிக்கப்பட்டுள்ள வெறும் 1 இலட்சம் ரூபாய் இழப்பீடு கேலிக்கூத்தாக உள்ளதை அரசியல் தலைவர்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த இழப்பீட்டுத் தொகையை 10 இலட்ச ரூபாயாக உயர்த்த வேண்டும். இறந்தவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை அளிக்க வேண்டும். அது, சத்துணவு உதவியாளர் என்பது போன்ற வேலைகளாக அல்லாமல் வேறு உயர்ந்த வேலைகள் அளிக்கப்பட வேண்டும்.

6. காயமடைந்தவர்களுக்கு அவர்களது காயத்திற்குத் தகுந்தாற்போல, குறைந்தபட்சம் 1 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்.

7. தலித் கிராமங்கள் பலவும் கடுமையாக அரசால் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையை நாங்கள் நேரில் கண்டோம். எடுத்துக்காட்டாக, கொல்லப்பட்ட பழனிக்குமாரின் பள்ளப்பச்சேரி கிராமத்தில் குடிநீர் வசதி, சாலை வசதி ஏதுமில்லை. சாதி இறுக்கம் மிகுந்த மண்டல மாணிக்கம் ஊரின் வழியாகவே வெளியூர் செல்லக்கூடிய நிலை மாற்றப்பட்டு புறவழிச்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. அரசு இவற்றில் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

8. மண்டல மாணிக்கம் போன்ற கிராமங்களில் உள்ள பள்ளிகளில் தலித் குழந்தைகள் மாற்றுச் சான்றிதழ் பெற்று வெளியேறுவது மிகவும் கவலையளிக்கக்கூடியதாக உள்ளது. இது குறித்த விசாரணை ஒன்றை மாவட்டக் கல்வி அலுவலரும், ஆதி திராவிட நலத்துறையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

9. பரமக்குடி, இராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் காவல்துறை, வருவாய்த்துறை, உளவுத்துறை ஆகியவற்றிலுள்ள அதிகாரிகளில் ஆதிக்கச்சாதியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர், தலித்கள் எவ்வளவு பேர் என்ற விவரத்தை அரசு வெளியிட வேண்டும். இந்தத் துறைகள் ஒவ்வொன்றிலும் போதிய அளவில் இப்பகுதியில் தலித் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

10. இம்மானுவேல் சேகரனின் நினைவு நாள் அல்லது பிறந்த நாளை அரசு அங்கீகரித்து விழா எடுக்க வேண்டும். இம்மானுவேல் சேகரனின் நினைவிடம் உள்ள சாலை அகலப்படுத்தித் தூய்மை செய்யப்பட வேண்டும்.

11. அரசு மற்றும் காவல் துறை அதிகாரிகள் மத்தியில் தலித் விரோத மன நிலையும், ஆதிக்கச் சாதி ஆதரவுப் போக்கும் உள்ள நிலைக்கு எதிராக அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். திருமதி. சிவகாமி ஐ.ஏ.எஸ். ஆதிதிராவிட நலத்துறைச் செயலராக இருந்தபோது, அரசு மற்றும் காவல்தறை அதிகாரிகளுக்கு தலித் பிரச்சனைகளில் உணர்வூட்டுதல் என்ற பயிற்சியினைத் தொடங்கினார். எனினும் அது விரைவில் நிறுத்தப்பட்டு விட்டது. அரசு இதைத் தொடர வேண்டும். அருண்ராய் போன்ற இளம் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடமே தலித் தலைவர்கள் என்றால் ரவுடிகள் என்பது போன்ற ஒரு பார்வையும், ஆதிக்கச்சாதிக்குச் சமமாக அடித்தள மக்கள் உரிமை கோரும்போது, அது சட்டப்பூர்வமானதாக இருப்பினும் பொறுப்பற்ற செயல் என்பதாகக் கருதும் போக்கும் இருப்பது கவலையளிக்கிறது.

12. துப்பாக்கிச் சூட்டை அரசியல் கட்சிகள் பலவும் கண்டித்துள்ளன. சாதிக் கட்சிகள், குறிப்பாக முக்குலத்தோர் சார்ந்த சாதிக் கட்சிகள் கண்டிக்காதது வருந்தத்தக்கது. துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்துள்ள அரசியல் கட்சிகள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்த அழுத்தத்தைத் தொடர்ந்து அரசுக்கு அளிக்க வேண்டும்.

13. பாதிக்கப்பட்டோருக்காக நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் தேடிவரும் வழக்கறிஞர்கள் பொ.இரத்தினம், பசுமலை, ரஜினி ஆகியோரை இக்குழு பாராட்டுகின்றது.


தொடர்பு முகவரி :<br>
பேரா. **அ. மார்க்ஸ்**<br>
3/5, முதல் குறுக்குத் தெரு, சாஸ்திரி நகர்<br>
அடையாறு, சென்னை– 600 020,<br>
செல் : 9444120582

வழக்கறிஞர் ஏ. **முஹம்மது யூசுப்**<br>
142, வடக்கு வெளி வீதி, 2வது மாடி,<br>
யானைக்கல், மதுரை – 625 001.<br>
செல்: 9489871185

# தலித்துகளை குறிவைக்கும்.......

பரமக்குடியில் தலித்துகளுக்கு எதிராக நடைபெற்ற காவல் துறையின் நடவடிக்கை தமிழகம் முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் மனதில் மாறாத அழிக்க முடியாத தழும்புகளை விட்டுச் சென்றிருக்கிறது.

**- S. துரைராஜ்**

**மேற்சொன்ன சம்பவம் குறித்து குடிமக்களின் உரிமைகள் சார்ந்த நிறுவனங்கள் பல கேள்விகள் தொக்கி நிற்பதாக கூறகின்றன. இந்தக் கேள்விகள் அந்த சம்பவத்தை காவல்துறை சமாளித்த விதம் குறித்து மட்டுமல்லாது தமிழகத்தின் ஜனத்தொகையில் பெருவாரியாக உள்ள தலித்களின் மீதான அரசின் கண்ணோட்டத்தையும் உள்ளடக்கியதாகும் எனக் கூறுகின்றன.**

தமிழக காவல்துறை தன்னுடைய நவீன அவதாரத்தில் கடந்த 150 ஆண்டுகளின் புகழ் மிக்க பாரம்பரியத்தை பிரதிபலிக்கின்றது. 1990களில் அரசு சம்பந்தப்பட்ட அமைப்புகளை பலப்படுத்துகின்ற செயல்களில் காவல்துறை நவீனப்படுத்தப்பட்டது. இது நான் முதலமைச்சராக பதவிவகித்த காலக்கட்டமான 1991–1996 காலங்களில் நிகழ்ந்தது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட தமிழக காவல்துறை தன்னை முதிர்ச்சியும், நவீனமும், அதே சமயத்தில் மனிதாபிமானமும், மக்களின் மற்றும் பிரச்சனைகளின் போது நல்ல அணுகுமுறையும் கொண்ட சக்தியாக மாறி இருக்கிறது.

– ஜெ.ஜெயலலிதா, முதலமைச்சர், தமிழ்நாடு.

ஆகஸ்ட் 24ஆம் தேதி அன்று தமிழக சட்டசபையில் பட்ஜெட் கூட்டத்தொடரில் கம்பீரமாக தமிழக முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கண்டவாறு கூறியபோது அவர் கனவிலும் நினைத்திருக்கமாட்டார், அவர் பதவி ஏற்ற 20 நாட்களுக்குள் இப்படிப்பட்ட ஒரு நீதிமன்ற விசாரணைக்கு ஆணையிடக்கூடிய ஒரு சம்பவம் நிகழும் என்று. அதிலும் குறிப்பாக காவல்துறையும் உள்நாட்டு பாதுகாப்புத்துறையும் அவருடைய பொறுப்பில் உள்ளது என்பது நினைவு கூறத்தக்கது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி நகரத்தில் 6 தலித்துகள் கொல்லப்பட்டதும் பலர் காயமுற்றதும் இந்த சம்பவத்தால் நிகழ்ந்தது. ஆதிதிராவிடர்களுக்கான தேசிய ஆணையம் விரிவான அறிக்கையினை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்று அனுப்ப தமிழக அரசை கேட்டிருந்தது, மேலும் ஓர் அவமானம் தமிழக அரசுக்கு நேர்ந்தது எனலாம்.

ஆரம்பத்தில் தமிழக முதல்வர் நீதிமன்ற விசாரணைக்கு தயக்கம் காட்டிய போதிலும் பின்பு மாவட்ட வருவாய் அதிகாரி (DRO) ஆய்வு செய்து அறிக்கை அனுப்புமாறு ஆணை பிறப்பித்தார். ஆனால் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த கே. பாலபாரதி சட்டசபையில் DRO என்பவர் ஆட்சியருக்கும் காவல்துறை கண்காணிப்பாளருக்கும் கீழே பணிபுரிகின்றவர் எனும் காரணத்தால் சுதந்திரமான விசாரணை நடத்துவது கடினம் என்று சுட்டிக்காட்டிய போது மாற்றி ஆணையிட்டார். பணியிலுள்ள நீதிபதியின் விசாரணைக்கு அனுப்புவதை தவிர்த்து திருமிகு.ஜெ.ஜெயலலிதா ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் அமைந்த கமிஷன் ஒன்று ஏற்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டார்.

**அலுவலகத் தகவல்களின்படி சேகரனின் நினைவு நாளின் போது நாலாயிரம் காவல்துறையினர் (அதிகாரிகளையும் சேர்த்து) அந்த மாவட்டத்திலுள்ள பதட்டமான பல இடங்களில் சிறப்பாக பயன்படுத்தப்பட்டனர் என்று கூறப்படுகிறது. ஆனால் பரமக்குடியில் சம்பவம் நிகழ்ந்தபோது தேவையான அளவிற்கு காவலர்கள் நிறுத்தப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது.**

மறைந்த இமானுவேல் சேகரன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக செப்டம்பர் 11 ஆம் தேதியன்று பரமக்குடியில் குவிந்த இந்த தலித்துகளின் மீது காவல்துறை எடுத்த நடவடிக்கையானது தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் மனதில் அழிக்க முடியாத தழும்புகளை ஏற்படுத்தியது. இதே பரமக்குடியில்தான் 54 ஆண்டுகளுக்கு முன்பு ஆதிக்க சாதி இந்துக்களால் கொடுமையான முறையில் இம்மானுவேல் சேகரன் கொலைசெய்யப்பட்டார்.

செப்டம்பர் 11 ஆம் தேதியன்று நிகழ்ந்த இன்னொரு சம்பவத்தில் இரண்டு நபர்கள் மீது காவல்துறை சுட்டதில்

குண்டு பாய்ந்து காயமுற்றனர். இவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் செயல்பாட்டாளர்கள் ஆவர். இது நிகழ்ந்தது மதுரையை அடுத்த சிந்தாமணியில்.

பரமக்குடியில் தலித் குழுவினர் மதுரை இராமேஸ்வரம் நெடுஞ்சாலையில் உள்ள "ஐந்து முனை சந்திப்பில்" சாலைமறியலில் ஈடுபட்ட தமிழக மக்கள் முன்னேற்றகழகத் தலைவர் ஜான்பாண்டியனை தூத்துக்குடி மாவட்டத்தில் கைது செய்ததை விடுதலை செய்யக்கோரினர். பாண்டியன் பரமக்குடிக்கு இம்மானுவேல் சேகரனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக செல்லும் வழியில்தான் இந்த கைது நிகழ்ந்தது. இதையொட்டி நிகழ்ந்த சாலை மறியலில் காவல்துறை கடுமையான நடவடிக்கையில் இறங்கியது.

சேகரனின் நினைவிடத்திற்கு செல்லுகின்ற மற்றும் சென்று திரும்பிய பெருந்திரளான மக்கள் கல்லெறிதல், வாகனங்களுக்கு தீ வைத்தல், பெட்ரோல் குண்டுகளை எறிதல் போன்றவற்றின் காரணமாக ஆதரவின்றி தவிக்கவிடப்பட்டனர். இந்த நிலையில் காவல்துறை கம்புகளை வைத்து அடிதடிகளில் ஈடுபட்டதோடு துப்பாக்கி சூடும் நடத்தியது நிலைமையை மேலும் மோசமாக்கியது. மதியம் 12.40 மணி முதல் மாலை 5.15 மணி வரை துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டதாக அவ்விடத்தில் வசித்த மக்கள் கூறினர். உயிரை காப்பாற்றிக்கொள்ள ஓடிய மக்களும் காவல்துறையின் அடிதடியால் காயமுற்றவர்களும் காவல்துறையின் காவலில் வைக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சியில் சில காவலர்களும் காயமுற்றனர். பல வாகனங்கள் சேதமுற்றன.

**உரிமைக் கண்ணோட்டத்தோடு மனித மாண்புகளையும் உரிமைகளையும் தூக்கி நிறுத்தும் மனிதர்கள் எல்லா இனங்களிலும் சமூகத்தினர்களிடையேயும் இருக்கிறார்கள்.**

அலுவலகத் தகவல்களின்படி சேகரனின் நினைவு நாளின் போது நாலாயிரம் காவல்துறையினர் (அதிகாரிகளையும் சேர்த்து) அந்த மாவட்டத்திலுள்ள பதட்டமான பல இடங்களில் சிறப்பாக பயன்படுத்தப்பட்டனர் என்று கூறப்படுகிறது. ஆனால் பரமக்குடியில் சம்பவம் நிகழ்ந்தபோது தேவையான அளவிற்கு காவலர்கள் நிறுத்தப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டின் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் பல்லவராய நேந்தலைச்சேர்ந்த ஆர்.கணேசன் (வயது 65), வீராப்பாளையத்தைச் சேர்ந்த பி.ஜெயபால் (வயது 20) பரமக்குடியைச் சேர்ந்த எஸ்.வெள்ளைச்சாமி (வயது 65), கீழ்கொடமனூரைச் சேர்ந்த தீர்த்தக்கனி (வயது 25) மற்றும் சடையனேரியைச் சேர்ந்த முத்துக்குமார் (வயது 26) ஏறத்தாழ எல்லோருமே விவசாயக் கூலித்தொழிலாளர்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்படாத தொழில் செய்யும் தொழிலாளர்கள்.

### போலீஸ் தடியடியால் பலத்த காயங்களுக்கு உட்பட்டு சிகிச்சை பெற்றுவரும் தலித்துகள்:

காவனூரைச் சேர்ந்த ஐ. இஸ்ரவேல் மற்றும் எம்.தனக்கொடி, அம்மன் கோவிலைச் சேர்ந்த ஜி.செந்தில், பெத்தனேந்தலைச் சேர்ந்த கே.வெள்ளைச்சாமி, பாம்பூரைச் சேர்ந்த எஸ். சந்திரன் மற்றும் பொன்னையாபுரத்தைச் சேர்ந்த கே.பாண்டி என்பவர்களாகும். பாண்டி என்பவர் 60 வயதான கட்டிடத்தொழிலாளி . அவர் சம்பவம் நடந்த இடத்திற்கு பக்கத்தில் குளித்துக்கொண்டிருக்கும்போது லத்திக்கம்பை சுழட்டியபடி வந்த காவலர்கள் அடித்து நொறுக்கியதாக கூறினர். அவர் இடது கையிலும் இடது காலிலும் எலும்பு முறிவு காரணமாக அவதிப்படுகிறார்.
70 வயது நிரம்பிய துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியரான வெள்ளைச்சாமி கடந்த 20 வருடங்களாக பரமக்குடிக்குச் சென்று சேகரனுக்கு அஞ்சலி செலுத்தி வருவதாகக் கூறினார். இதற்கு முன்பு இவ்வளவு மோசமாக சேகரனின் நினைவு நாளில் காவலர்கள் நடந்துகொண்டதில்லை என்று நினைவு கூர்ந்தார். காவல் நிலையத்திற்கு எடுத்துச்சென்ற பின்பும் காயமுற்றவர்களை அவமானப்படுத்தியதாக அவர் குற்றம் சாட்டினார்.

### கதைகள் சொல்லும் சின்னங்கள் :

ஒருவாரத்திற்குப் பின்பும் வன்முறையைச் சொல்லும் அடையாளங்களும், உருக்குலைந்த வாகனங்களும், தெருவில் கிடந்த உடைந்த கண்ணாடித் துண்டுகளும், கற்களும் வன்முறையை அடையாளம் காட்டின. பள்ளிகளும், வியாபார நிறுவனங்களும் பரமக்குடியிலும் அதைச்சுற்றியுள்ள ஊர்களிலும் மூடப்பட்டு சாலைகளைப்போலவே வெறிச்சோடிக் கிடந்தன. தென்மாவட்டங்களில் பேருந்து போக்குவரத்துக்கள் பெரிதளவு பாதிக்கப்பட்டிருந்தன. இராமநாதபுரம் மற்றும் தென்மாவட்டங்களில் சகஜ நிலைக்கு திரும்பிவிட்டதாக அதிகாரிகள் கூறிக்கொண்டாலும் உண்மையில் அவ்வாறு இல்லை. பல கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள தலித்துகளிடம் கலந்துரையாடியபோது அமைதிக்குக் கீழே நீறுபூத்த நெருப்பாக கோபம் கனன்று கொண்டிருந்தது. தலித்துகளின் எழுச்சியினை ஒடுக்கும் செயலாக அவர்கள் கருதினார்கள். மதிப்பிற்குரிய தங்கள் தலைவருக்கு

அஞ்சலி செலுத்தும் தங்கள் திட்டத்திலிருந்து பயந்து ஓடிப்போக வைத்ததை நினைத்து வருந்தினர்.

பல கிராமங்களில் ஊர் மக்கள் குறிப்பாக தலித்துகள் பயத்தில் இருக்கின்றனர். ஏனெனில் காவல்துறை 1000 நபர்களின் மீது வழக்குப்பதிவு செய்திருக்கிறது. வழக்குப் பிரிவுகள் 307 (கொலை முயற்சி) 324(வேண்டுமென்று பயங்கர ஆயுதங்களை வைத்து தாக்கியது) , 435 (நெருப்பு மற்றும் வெடிக்கக்கூடிய பொருட்களை உபயோகித்து சேதம் ஏற்படுத்துவது, 427 (சேதப்படுத்தும் குற்றமுறு செயல்), 147 (ரகளை), 148 (பயங்கர ஆயுதத்துடன் ரகளை) மற்றும் 149(சட்டத்திற்குப் புறம்பாக கூடுதல்) ஆகிய இந்திய குற்றவியல் மற்றும் பிரிவு 174 குற்ற நடவடிக்கைகளின் கீழ் வழக்குகள் காவல்துறையால் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

"அதிகாரிகள் சொல்லுவது போல நிலைமை பழைய நிலைக்குத் திரும்பிவிட்டதாக சொல்ல முடியாது. எங்களின் பிரச்சனைகள் மிகப்பலவாகும். நாங்கள் குழந்தைகளையும், வயதானவர்களையும் கவனித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஆண்கள் அனைவரும் கைது செய்யப்படுவதற்கு பயந்து பரமக்குடி மற்றும் சுற்றிலும் உள்ள குடியிருப்புகளிலிருந்து ஓடி விட்டார்கள்" என்று ஒரு தலித் பெண்மணி கூறினார். இது தலித் காலனிகளிலுள்ள பலரின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது.

செப்டம்பர் 11 தேசிய புரட்சிக் கவியான சுப்ரமணியபாரதியின் இறந்த நாளாகும். ஒடுக்கப்பட்டவர்களுக்காக அதிலும் குறிப்பாக தலித்களின் விடுதலைக்காக பாடியவர் அவர். 1957–ல் பாரதிக்காக அஞ்சலி செலுத்திய கூட்டங்களில் பேசிவிட்டு திரும்பும்போதுதான் இம்மானுவேல் சேகரன் ஆயுதம் ஏந்திய கும்பலால் கொலை செய்யப்பட்டார்.

அதற்கு முந்திய தினத்தில்தான் அதாவது செப்டம்பர் 10–ஆம் தேதியன்று காங்கிரஸ் அனுதாபியும் தலித் தலைவருமான இம்மானுவேல் சேகரன் முக்குலத்தோர் தலைவரான முத்துராமலிங்கத் தேவர் விலகல் காரணமாக காலியான முதுகுளத்தூர் சட்டசபை பிரதிநிதிக்கான இடைதேர்தலின் போது ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் முடிவு பெற நடந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டார். தலித்களை கடத்தி சென்றதாக குற்றம்சாட்டப்பட்ட சசிவர்ண தேவரின் இடைத்தேர்தல் வெற்றியின் போது ஏற்பட்ட கலகத்தில் தலித்கள் கொல்லப்பட்டனர். பேச்சுவார்த்தையில் தமக்கு சமமாக பங்கெடுத்த சேகரனின் பங்கெடுப்பு காரணமாக அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட முத்துராமலிங்கத்தேவர் தயக்கம் காட்டியதாக கூறப்படுகிறது.

கடந்த 20 வருடங்களாக தலித்துகள் சேகரனின் இறந்த நாளை பரமக்குடியிலுள்ள ஸ்தூபிக்குச் சென்று "குருபூஜையாக" அனுசரிக்கின்றனர். இது தேவர் இனத்தினர் பசும்பொன்னில் அக்டோபர் 30 ஆம் தேதியன்று அனுசரிப்பது போன்றதுதான். தென்மாவட்டங்களிலுள்ள பல கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள தலித்துகள் ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறு வந்து செல்கின்றனர்.

**தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை காவல்துறை பின்பற்றவில்லை என்பதோடு பதற்ற சூழ்நிலைகளில் காவல்துறை நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகளின் படியும் நடந்துகொள்ளவில்லை என்பதாகும்.**

கடந்த 5 வருடங்களில் பரமக்குடிக்கு வந்து செல்லும் மக்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருக்கிறது. தலித் நிறுவனங்கள் சேகரனின் நினைவு நாளை, தேவர் ஜெயந்தியை கொண்டாடுவது போல அரசின் நினைவு நாட்களில் ஒன்றாக கொண்டாடப்பட வேண்டும் என்று நிர்பந்தித்துக் கேட்டுக்கொண்டாலும் கூட அரசு அதற்கு இன்னும் செவிசாய்க்கவில்லை.

**"முன்னெச்சரிக்கை நடவடிக்கை":**

இந்த முறை காவல்துறையின் நடவடிக்கை மிகப்பெரிய அளவில் தலித்துகள் பங்கெடுக்கும் முயற்சியினை தடுத்து நிறுத்திவிட்டது என்றும் பல மாவட்டங்களிலிருந்து இந்த குருபூஜையில் கலந்து கொள்ள தலித்துகள் திட்டமிட்டிருந்தனர் என்றும் கூறுகிறார், தமிழ்நாடு சுமைதூக்குவோர் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளரான வி.காசிநாததுரை. சில அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சேகரனின் சொந்த கிராமமான செல்லூர் கிராமவாசிகளும், சில தலித் செயல்பாட்டாளர்கள் மட்டும்தான் கலந்து கொள்ள முடிந்தது என சுட்டிக்காட்டினார்.

தியாகி இமானுவேல் பேரவையின் பொதுச்செயலாளர் பி.சந்திரபோஸ் கூறும்பொழுது இந்த நிறுவனம் 1988–ல் இருந்து குருபூஜை செய்வதாகவும் இந்த முறைதான் காவல்துறை மிகமோசமாக அத்துமீறி செயல்பட்டிருக்கின்றது என்று கூறுகிறார். இதற்கு பின்னர் பரமக்குடிக்கு வரும் தலித்கள் சில கிராமங்களின் வழியாக

வரும்போது முக்குலத்தோர் இனத்தைச் சேர்ந்த சில மனிதர்களால் தாக்கப்படுகிறார்கள். மேலும் சந்திரபோஸ் கூறுகிறார், “சில ஆதிக்க மனம்படைத்த பிரமுகர்கள்தான் தலித்களின் எழுச்சியை பொறுக்கமாட்டாமல் இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதல்லாமல் எந்த ஒரு இனத்தையும் நான் குறிப்பிட்டுக் கூறவில்லை ஏனென்றால் உரிமைக் கண்ணோட்டத்தோடு மனித மாண்புகளையும் உரிமைகளையும் தூக்கி நிறுத்தும் மனிதர்கள் எல்லா இனங்களிலும் சமூகத்தினர்களிடையேயும் இருக்கிறார்கள்.

பரமக்குடியில் ஏற்கனவே காவல்துறையினரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு 1991ல் மூன்று நபர்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் இருவர் தலித்கள். 1998ல் ஒரு தலித்பெண் கொல்லப்பட்டார்.

**தலித்துகள் பற்றிய கண்ணோட்டம் :**

சில மனித உரிமை நிறுவனங்கள் கூறுவது போல இந்த சம்பவம் பல கேள்விகளை எழுப்புகின்றது. நிலைமையை சமாளிப்பதில் எப்படி நடந்துகொள்ளப்பட்டது என்று மட்டுமல்லாமல் தலித்துகள் மீதான அரசின் பார்வை எப்படி இருக்கின்றது என்பது பற்றியும் சிந்திக்க வேண்டிய ஒன்று ஆகும். தமிழ்நாட்டின் ஜனத்தொகையில் அதிக சதவீதம் உள்ள தலித்துகள் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டம் (தற்போதைய இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்) இவற்றில் வசிக்கின்றார்கள். இவர்களின் பிரச்சனைகள் பலவாகும். தலித் இளைஞர்களிடையே வளரும் விழிப்புணர்வு, வாழ்வாதாரங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் குறைந்து வரும் வாழ்க்கைத்தரம், இந்தப் பகுதிகளில் உள்ள தொழில் முன்னேற்றப் பின்னனடைவு இவர்களுக்கும் ஆதிக்க சாதியினர்களுக்கும் இடையே உள்ள முரண்பாடுகள் இது காரணமாக எழும் பிரச்சனைகள் உதாரணமாக உள்ளாட்சி அரசாங்கங்கள் திட்டமிட்ட சுயநல தாக்குதல்கள் போன்றவை ஜாதிக்கலகம் போன்றவற்றில் காவல்துறையின் பாரபட்சமான போக்கு போன்றவைகளாகும்.

ஜெ.ஜெயலலிதா சட்டசபை பேச்சானது அதாவது செப்டம்பர் 12ஆம் தேதி அவர் கூறிய பரமக்குடியில் நடந்தது “தொடர் சங்கிலிகளாக நடந்த நிகழ்ச்சிகள் காரணமாக இவ்வாறு ஆயிற்று என்பது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பற்றி மண்டலமாணிக்கம் கிராம சுவரில் எழுதப்பட்ட வாக்கியங்களும், பச்சேரி எனும் தலித் கிராமக்குடியிருப்பைச் சேர்ந்த 12ஆம் வகுப்பு மாணவன் டி.பழனிக்குமார் செப்டம்பர் 9ஆம் தேதி கொல்லப்பட்டார் எனக்கூறிய போது இடதுசாரி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களே இதனை மறுத்து சப்தம் எழுப்பினர். தீண்டாமை ஒழிப்பு முன்னணி (TNUEF) தமிழ்நாடு தலைவரான பி. சம்பத் இதுபற்றிக் கூறும்போது நல்ல சீரான மனநிலையில் உள்ள எவரும் முதலமைச்சரின் இந்த விளக்கத்தை அதாவது ஒரு தலித் மாணவன் கொல்லப்பட்டதற்காக சொல்லப்பட்ட விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. முதலமைச்சரின் இந்த வாக்கியங்கள் சட்டசபையில் கூறப்பட்டது உண்மையான பிரச்சனைகளிலிருந்து மாற்றி தடம்புரள வைப்பதாகும் என்று மேலும் கூறுகிறார். இது காவல்துறையின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதாகவும் இருக்கிறது என்றும் குற்றம் சாட்டினார்.

TNUEF–ன் செயலாளர் கே.சாமுவேல்ராஜ்பச்சேரிக்கு சென்று பார்வையிட்ட பின்பு ஜெ.ஜெயலலிதாவின் அறிக்கையை கடுமையாக விமர்சித்தார். தாங்கமுடியாத மனவேதனையுடன் அவர் மேலும் கூறியதாவது, சட்ட சபையில் ஜெ.ஜெயலலிதா கூறியது பரமக்குடியில் தலித்களின் மீது ஏவப்பட்ட தாக்குதல் ஆனது தொடர் நடவடிக்கைகளின் உச்சநிலை அல்லது இறுதிப்பயன் என்பது நடக்கவிருக்கும் உள்ளாட்சி தேர்தல்களில் தம்முடைய கட்சியின் வெற்றித் தோல்விகளை மனதில் வைத்து பேசப்பட்டிருக்க வேண்டும். குற்றப்பிரிவு 124 தடை உத்தரவை உடனடியாக நிறுத்தினால்தான் கட்சித்தலைவர்கள், குடியுரிமை அமைப்புகள் மற்றும் ஊடகங்கள் போன்றவை மக்களிடையே கலந்துரையாடி அவர்களின் உள்ளங்களில் பயங்களைப்போக்கி நம்பிக்கையை கொண்டுவர முடியும் என்றார்.

ஒரு சிலர் காவல்துறை தற்காப்புக்காகவும் பொதுசொத்துக்களை பாதுகாக்கும் நோக்கத்திலும் துப்பாக்கிச் சூடு நடத்தி இருக்கலாம் என்று கூறுகின்றனர். இதில் குடியுரிமை அமைப்புகள் கருத்து வேறுபட்டது. அதாவது தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை காவல்துறை பின்பற்றவில்லை என்பதோடு பதற்ற சூழ்நிலைகளில் காவல்துறை நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகளின் படியும் நடந்துகொள்ளவில்லை என்பதாகும். தேசிய ஆதிதிராவிட ஆணையத்தின் அங்கத்தினரான லதாபிரியகுமார் செப்டம்பர் 15–ல் பரமக்குடி இராமநாதபுரம் இடங்களை பார்வையிட்டு விட்டு நிகழ்ந்த சாவுகள் பற்றி “மிகவும் துர்திஷ்டவசமானது” பிரச்சனையை தவறான விதத்தில் அணுகியதால் அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டுவிட்டது, தவறான முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் அமைதியாக நடைபெற வேண்டிய நினைவு நாளான இம்மானுவேல் சேகரனின் நினைவு தினம் எதிர்மறையாக மாறிவிட்டது என்றார்.

காவல்துறை, எதிர்த்து போராடிய மக்களிடம் எச்சரிக்கை அறிவிப்புகளை ஒலி பெருக்கிகளின் மூலம் செய்திருக்கலாம் என்று கூறிய லதாபிரியகுமார் மேலும் கூறியதாவது : போலீஸ் துப்பாக்கிச்சூட்டினால் பாதிக்கப்பட்டவர்கள் இடுப்புக்கு மேலேயே சுடப்பட்டிருந்ததாக மக்கள் கூறினர். காவல் துறை எதிர்ப்புக்காட்டிய மக்களிடம் அதாவது அரசு வாகனங்களை சேதப்படுத்தியதற்காக வேறு அணுகுமுறைகளை பயன்படுத்தி இருக்கலாம் அதைவிடுத்து உச்சகட்டமாக பயன்படுத்த வேண்டிய துப்பாக்கி சூடு தவறானது என்றார். "இறந்து போனவர்களின் உயிரை யாராலும் மீட்டுத்தர முடியாது ஆனால் வாகனங்களை வாங்கிக்கொள்ள முடியும் என்றார் அவர். சம்பத் கூறுவது என்னவென்றால் எப்போதெல்லாம் தலித்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்காக தங்கள் குரல்களை உயர்த்துகிறார்களோ அப்போதெல்லாம் காவல்துறை வன்முறையை அவிழ்த்துவிடுகிறது. நல்லமூளைக்கிணற்றில் மற்றும் கொடியங்குளம், தூத்துக்குடி மாவட்டத்தில் தலித்களின் மீது தாக்கியது, மாஞ்சோலையில் போலீஸ் துரத்தியதன் காரணமாக 17 எஸ்டேட் தொழிலாளர்கள் நீரில் மூழ்கியது, விழுப்புரம் மாவட்டத்தில் கங்கையனூர் கிராமத்தில் கோவிலுக்குள் நுழைய முயன்ற ஒடுக்கப்பட்ட மக்களைத்தாக்கியது, மதுரை மாவட்டம் உத்தப்புரத்தில் பெண்கள், குழந்தைகள், முதியோர்களை போலீஸ் அடித்து நொறுக்கியது என்று வரிசையாக சொல்லிக் கொண்டே வந்தார்.

டாக்டர் கே.கிருஷ்ணசாமி புதிய தமிழகம் எனும் தலித்துகள் மிகுந்த கட்சி ஸ்தாபகரும், தலைவருமான இவர் கூறியதாவது; காவல் துறையின் துப்பாக்கி சூடு தலித்களின் மீதான மனவெறுப்பினையும் அமைதியாக நடைபெறவிருந்த இம்மானுவேல் சேகரனின் நினைவு நாளைத்திட்டமிட்டு முறியடிக்க மக்களை பயந்து ஓடச்செய்த நிலையாகும். சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிக்கும் பாசாங்கில் காவல்துறை எல்லை மீறுவதை முதலமைச்சர் இனியும் பொறுத்துக்கொண்டு இருக்கக்கூடாது என்றும் துப்பாக்கிச்சூடு நடைபெறுவதற்குக் காரணமாய் இருந்த காவல்துறை அதிகாரிகளை உடனே தற்காலிக வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்று கூறினார். குடிமை உரிமைகளுக்கான மக்கள் அமைப்பின் மதுரை பிரிவு (PUCL) பரமக்குடி மற்றும் மதுரையில் நடந்த துப்பாக்கிச்சூடு பற்றி கடுமையாக கண்டிக்கிறது. அதன் உபதலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளரான ஆர்.முரளி கூறுகிறார் "காவல்துறை மிகவும் கவனமாகவும், புத்திசாலித்தனத்துடன் நடந்துகொண்டிருக்க வேண்டும் என்று கருதுகிறோம். இந்த சம்பவம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் இந்த சமயங்களில் என்பதை சுட்டிக்காட்டுகிறது.... பரமக்குடி மக்களின் மீது கடுமையாக குண்டாந்தடி பிரயோகம் (லத்தி) செய்துவிட்டு துப்பாக்கியால் சுட ஆரம்பித்திருக்கிறார்கள், காவல்துறையினர். துப்பாக்கியால் சுடும்படி உத்தரவிட்ட காவல்துறை அதிகாரிகள் எந்த அதிகாரத்தில் செய்தார்கள் என்பதை விளக்க வேண்டும். அதே போல மதுரையில் ஒரு போலீஸ் அதிகாரி தம் கைத்துப்பாக்கியால் சுட்டதும் ஒரு சட்ட மீறுதல் ஆகும்.



துப்பாக்கிச்சூட்டில் 6 தலித்கள் கொள்ளப்பட்டனர்

http://ibnlive.in.com/newstopics/Paramakudi.html

மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குனரான ஹென்றி டிபேன் தங்கள் அமைப்பில் உண்மை அறியும் குழு சமர்பித்த ஆரம்பக்கட்ட அறிக்கையை சுட்டிக்காட்டி " மிகத்தெளிவாக காவல்துறையின் சித்ரவதையானது சில தலித் செயல்பாட்டாளர்களின் மீதானதாகும்.... பெரும்பாலான குண்டுபாய்ந்த காயங்கள் யாவும் இடுப்புக்கு மேல்தான் இருக்கிறது, இறந்தவர்களை அவர்களுடைய உறவினர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் அல்லது மனித உரிமை பாதுகாப்பாளர்கள் முன்னிலையில் மீண்டும் பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும்" என்று கூறுகிறார்.

"முதலமைச்சர் தென் மாவட்டங்களில் நிகழும் காவல்துறையின் வன்முறைகளைப் பற்றிக் கூறும்போது கவனமாக வார்த்தைகளை வெளியிடும்படியும் வதந்திகளின் அடிப்படையில் அவருக்குத் தெரிந்தோ தெரியாமலோ நடைபெறக்கூடாது" என்று மேலும் கூறகிறார். சட்டசபை கூட்டத்தொடரில் இந்தப் பிரச்சனை பலமாக எதிரொலித்தது. எதிர்கட்சியை சார்ந்த அங்கத்தினர்கள் பல்வேறுவிதமாக இந்தப்பிரச்சனையை குறித்து பேசி கவன ஈர்ப்பு தீர்மானம் போன்றவற்றைக்

கொண்டுவந்தனர். CPI(M), CPI, புதிய தமிழகம் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி போலீஸ் துப்பாக்கிச் சூடு பற்றிய விவாத மறுப்புக்கு தங்களின் எதிர்ப்பை காட்ட அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். எனினும் தங்களுடைய கருத்துக்களை ஊடகங்கள் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட காவல்துறையை சார்ந்தவர்களும், ரகளையில் ஈடுபட்ட காவலர்களையும் தற்காலிக வேலை நீக்கம் செய்யாமல் ஆய்வு விசாரணைக்கு உட்படுத்துவது அர்த்தம் இல்லாதது என்று CPI(M) –ன் தலைவர் A.சௌந்தரராஜன் மிகவும் திட்டவட்டமாகக் கூறினார். பரமக்குடியில் நிகழ்ந்த வன்முறை உளவுத்துறையின் தோல்வியையும், செயல் இழப்பையும் காட்டுவது என்பது அவர் கருத்தாகும். காவல்துறை பக்குவமாகவும் நியாயமாகவும் நடந்து கொண்டிருந்தால் துர்திஷ்டவசமான நிகழ்வுகளை தவிர்த்திருக்கலாம் என்றார். மேலும் அவர் குறிப்பிடுவதாவது, எப்போதெல்லாம் கலவரம் பிறக்கிறதோ அப்போதெல்லாம் பாதிக்கப்படுபவர்கள் தலித்துகளாகத்தான் இருக்கிறார்கள். TMMK தலைவர் ஜான்பாண்டியன் கைது செய்யப்பட்டது பொருந்தாத நிகழ்வு நிகழாமல் இருப்பதற்காகத்தான் என்று சொல்லப்பட்ட வாதத்தின் வெறுமையை சுட்டிக்காட்டினார்.

இறந்தவர்களின் நெருங்கிய குடும்பத்தார்க்கு 1 லட்சம் வழங்கும் அரசின் முடிவு பற்றி சௌந்தர்ராஜன் கூறும்போது இது போதாத தொகை, கொடிய வனவிலங்குகள் தாக்கி இறந்தவர்களுக்கு மூன்று லட்சம் கொடுக்கப்படுகிறது. CPI தலைவர் ஆறுமுகம் கூறும்போது காவல்துறை தலித்களின் மீது பொய் வழக்குகள் போடுவதையும் தலித் குடியிருப்புகளில் தேடுதல் மேற்கொள்வதையும் உடனே நிறுத்தவேண்டும் என்றார்.

CPI(M) கட்சியின் மாநில செயலாளர் G.இராமகிருஷ்ணன் தம்கட்சி மாநிலம் முழுவதும் செப்டம்பர் 17ஆம் தேதியன்று கண்டன ஆர்பாட்டம் செய்து தலித்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய காவல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்கபோவதாக கூறினார். மதுரை மற்றும் பரமக்குடியில் போலீஸின் அத்துமீறல்களை கண்டித்து CPI–ன் மூத்த தலைவர் R.நல்லக்கண்ணு தம்கட்சி செயலாளர்கள் செப்டம்பர் 20ஆம் தேதி எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாகவும் கூறினார்.

செப்டம்பர் 15 ஆம் தேதியன்று CPI(M)–ன் சட்டசபை அங்கத்தினர்களும் பிறரும் இணைந்த உண்மையறியும் குழு ஒன்று பரமக்குடியை அடுத்துள்ள கிராமங்களைப் பார்வையிட்டு உயிர் இழந்தோரின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர். கிராமங்களில் கிடைத்த தகவல்களின் படி பரமக்குடியிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் நிகழ்ந்த வன்முறை இரு ஜாதி மக்களிடையே கலவரமாக எழுந்து அது வன்முறைக்கு வழிவகுக்கவில்லை, ஆனால் காவல்துறையால்தான் இவ்வன்முறை நிகழ்ந்தது என்று A.சௌந்தரராஜன் குழுவின் தலைவர் என்ற முறையில் கூறினார். இந்தக்குழு நீதிபதி மோகன் தலைமையில் அமைந்த குழு சிபாரிசு செய்தபடி வேலைவாய்ப்பு பணிகளை இந்தப்பகுதியில் வாழும் பின்தங்கிய மக்களுக்கு வழங்க வேண்டும் என்று கூறியதை நினைவு படுத்தி உடனே நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியது. தென்மாவட்டங்களிலுள்ள வேலைவாய்ப்பின்மையையும் இது போன்ற கலவரங்களுக்கு காரணமான பலவற்றில் முக்கியமான ஒன்றாகும். பாரதிய ஜனதா கட்சி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி இரண்டும் தங்களுடைய உண்மை அறியும் குழுக்களை பரமக்குடிக்கு அனுப்பியது. செப்டம்பர் 12 ஆம் தேதி லோக் ஜனசக்தி கட்சியின் தலைவர் ராம்விலாஸ் பஸ்வான் தலித்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்த காரணமான காவல்துறையினர் மீது வழக்கு ஒன்றை பதிவு செய்யுமாறு மாநில அரசை கேட்டுக்கொண்டது. மேலும் அவர் உயிர் இழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 20 லட்சம் நஷ்ட ஈடு வழங்குமாறு கூறினார்.

திராவிட முன்னேற்றக்கழகம் அதற்கு முந்தைய ஆளும்கட்சியாக மாநிலத்தில் இருந்த காரணத்தால் மிகுந்த பதட்டமான இந்தப் பிரச்சனையில் மிகவும் கவனமாக இருக்க வேண்டி இருந்தது. ஏனென்றால் முக்குலத்தோர் இனத்தை வெளிப்படையாக எதிர்க்க முடியாது. ஏனெனில் அவர்களுடைய ஆதரவு எதிர்வரும் உள்ளாட்சி தேர்தலில் அந்தப் பகுதியில் தேவைப்படுகின்ற காரணத்தால். இருந்த போதிலும் கட்சியின் பொருளாளரும் முந்தைய துணை முதல்வருமான மு.க.ஸ்டாலின் இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிப்பு அடைந்த பகுதிகளை செப்டம்பர் 15 ஆம் தேதி பார்வையிட்டு துப்பாக்கிச் சூட்டினால் உயிர் இழந்த குடும்பங்களுக்கு தலா 1 இலட்சம் வழங்கினார்.

மதுரை இராஜாஜி மருத்துவ மனையில் (அரசு) சிகிச்சை பெற்று வந்தவர்களை செப்டம்பர் 14ஆம் தேதி பார்வையிட்ட பின்னர் ஜான்பாண்டியன் கூறியதாவது துப்பாக்கிச்சூடு தலித்களின் மீது காவல்துறை நடத்தியது, தலித்களின் எழுச்சியை அடக்குமுகமாகத்தான். ஒடுக்கப்பட்ட மக்கள் மீது அவிழ்த்துவிடப்படும் இந்தக் கொடுமை எந்த இன

மக்களுக்கும் நேரக்கூடாது என்றும் எல்லா இன மக்களும் சமூக நல்லிணக்கத்திற்காக இணைந்து பாடுபட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். மண்டலமாணிக்கம் கிராமத்தில் நடந்த நிகழ்வு தொடர் சங்கிலி நிகழ்வுகளாக மாறியது மற்றும் தலித் மாணவர் கொலை செய்யப்பட்டது இவற்றின் உச்சக்கட்ட நிகழ்வு பரமக்குடியில் நடந்தது என்ற முதலமைச்சரின் கண்ணோட்டத்தை கடுமையாக சாடிய ஜான்பாண்டியன் முதலமைச்சர் சில அரசு அதிகாரிகளால் தவறான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிறார் என்று கூறினார்.

மத்திய புலன் ஆய்வுத்துறை பரமக்குடி நிகழ்வுகளில் தலையிட்டு ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்றும் துப்பாக்கிச்சூட்டினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.10,000 வழங்குவதோடு தவறு செய்த காவல்துறை அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் மதுரைப் பிரிவில் மத்திய புலனாய்வுத்துறையின் ஆய்வு அறிக்கை வேண்டும் என்று பொதுநல வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இம்மானுவேல் சேகரனின் நினைவிடமான பரமக்குடியில் தன் அஞ்சலியை செலுத்திவிட்டு பழனிக்குமாரின் பெற்றோர்களை பச்சேரி கிராமத்தில் பார்த்து ஆறுதல் கூறுவது என்னும் ஜான்பாண்டியனின் இராமநாதபுரமாவட்ட விஜயம்தான் வன்முறைக்குக் காரணம் என்று அரசு தரப்பில் கூறப்படுகிறது. இராமநாதபுர மாவட்டத்தில் தன் மீதான ஆதரவை பலப்படுத்திக் கொள்வது ஜான்பாண்டியனின் திட்டமாக இருந்தது என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் இரு பிரிவுகளும் ஜான்பாண்டியனை பரமக்குடியில் தன் அஞ்சலியை செலுத்தவதற்கு காவல்துறை தடுக்காமல் இருந்திருந்தால் இந்த சோக விளைவுகள் வராமல் இருந்திருக்கும் என்று கருதுகின்றனர்.

இதே கம்யூனிஸ்ட் கட்சியின் இரு பிரிவுகளும் தமிழக அரசு உடனே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து 1990–களில் தென் தமிழ்நாட்டில் நிகழ்ந்த ஜாதிக்கலவரங்கள் போல் மீண்டும் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கருதுகின்றனர்.

உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கே.சம்பத் அவர்களின் தலைமையில் புலன் ஆய்வு விசாரணைக்குழு ஒன்று நியமித்திருப்பதாக தமிழக அரசு தெரிவித்திருக்கிறது. இந்த சிறப்புக்குழு எந்தெந்த சூழ்நிலைகளில் என்ன காரணங்களுக்காக காவல்துறை துப்பாக்கிச்சூடு நடத்தியது என்பதையும் அது தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சனைகள் போன்றவற்றை விசாரித்து அறியும். சூழ்நிலைகளின் அடிப்டையில் அந்த அதிகாரம் செயல்படுத்தப்படும்போது தேவையான ஒழுங்கு மற்றும் விதிமுறைகள் பின்பற்றப்பட்டதா, துப்பாக்கி சூடு துவங்குவதற்கு முன்பு அந்த விதிமுறைகளின்படி அல்லது வழிமுறைகளின்படி அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா , அல்லது காவல்துறை அத்துமீறி நடந்துகொண்டதா என்பதையும் இக்குழு உறுதிப்படுத்தும். இந்தக்குழு தன்னுடைய தீர்ப்புகளையும் சிபாரிசுகளையும் இரண்டு மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**பச்சேரியின் இழப்பு :**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பச்சேரி எனும் தலித் கிராமத்தில் பழனிக்குமார் இறப்பினால் நிகழ்ந்த துக்கமும் சோகமும் கல்லறை மீது விரிக்கப்பட்ட மெல்லிய பட்டுத்துணியாக பரவிக் கிடக்கிறது. அங்கு வாழும் அனைவரிடமும் செப்டம்பர் 9–ஆம் தேதியன்று 11ஆம் வகுப்பு படித்து வந்த T.பழனிக்குமாரின் கொலை நிகழ்ந்தது குறித்து மிகுந்த வேதனையை தந்துள்ளது.

பச்சை, சிவப்பு இணைந்ததான தேவேந்திரகுல வேளாளர் (பள்ளர்) இனத்தின் கொடி கிராமத்தின் நுழைவு வாயிலில் அரைக்கம்பத்தில் பரந்துகொண்டிருக்கிறது. அதன் கீழ் தலித் தலைவர் இம்மானுவேல் சேகரனின் படம் இருக்கிறது. பெண்கள் குழுக்களாக அமர்ந்து 16 வயது பையனின் கொடூரக்கொலையை நினைத்து துக்கித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆண்கள் தங்களுடைய வழக்கமான பணிகளை செய்யமுடியாமல் கொலையை தாங்கிக்கொள்ளவும் முடியாமல் இருக்கிறார்கள். பச்சேரி கிராமத்தை மரம் வெட்டுபவர்களின் கிராமம் என்று கூட அழைக்கலாம். அங்கு வசிக்கும் பெரும்பாலானவர்கள் கரிமூட்டம் போடுவதற்காக தினக்கூலியாக விறகு வெட்டுபவர்கள். அவர்களின் தினக்கூலி ரூ.150 முதல் ரூ.220 வரை ஆகும். தலித்கள், முக்குலத்தோர் இன மக்கள் வாழும் மண்டலமாணிக்கம் கிராமத்தை கடந்துதான் விருதுநகர் மற்றும் கமுதிக்குச்செல்லும் முக்கிய சாலைக்குச் செல்ல முடியும். மண்டல மாணிக்கம் பஞ்சாயத்தில் பச்சேரி ஒன்றுதான் தலித் கிராமம் ஆகும். அதனைச்சுற்றி ஆதிக்க ஜாதியினர் வாழும் கிராமங்கள் சூழ்ந்துள்ளன. இதனால் முக்கிய சாலைக்கு தலித்கள் செல்வது தடுக்கப்பட்டு விடும். பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் முக்குலத்தோர் இனத்தின் தலைவர் ஆவார். மண்டல மாணிக்கத்தில் உள்ள ஒரு பழைய கட்டிடத்தின் சுவற்றில் முத்துராமலிங்கத்தேவர் பற்றிய அவதூறு வரையப்பட்டிருந்ததுதான் பழனிக்குமார் கொலைக்கான காரணம் என்று அரசாங்கத்தால் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. ஆனால் அங்கே வாழும் உள்ளூர்

மக்கள் அதை மறுக்கிறார்கள். பழனிக்குமாரோ அல்லது பச்சேரியில் வசிக்கும் எவருமே இந்தச்செயலில் ஈடுபட்டிருக்க முடியாது. ஏனேன்றால் ஆதிக்க ஜாதி மக்கள் தம் வழக்கமான வழித்தடத்தினை தலித்களுக்கு மறுத்து வந்துள்ளதால் தலித்கள் மண்டலமாணிக்கம் கிராமத்திற்குள் நுழைய முடியாது என்பது உண்மையாகும்.



flashnewstoday.com

பழனிக்குமாரின் தந்தையாகிய T.தங்கவேல் தன் மகனைப்பற்றிக் கூறும்போது மிகவும் புத்திசாலிப்பையன் என்றும் பள்ளியில் அவனின் நன்னடத்தை மற்றும் ஒழுக்கத்திற்காக ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றவன் என்றும் கூறுகிறார். உள்ளூரிலுள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் 5ஆம் வகுப்பு வரை படித்துவிட்டு விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஆனைக்குளம் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் படிப்பைத் துவங்கினான். இந்த ஆனைக்குளம் கிராமம் பச்சேரியிலிருந்து 6கி.மீ. தொலைவில் உள்ளது.

பழனிக்குமார் கொலைசெய்யப்பட்ட அன்று பழனிக்குமாரும் அவருடைய நண்பர்களும் பச்சேரியை அடுத்துள்ள விருதுநகர் மாவட்டத்திலுள்ள தலித்கிராமமான முத்துராமலிங்கபுரம் எனும் தலித் கிராமத்தின் கோவில் திருவிழாவில் நடைபெற்ற நாடகத்தைப் பார்க்கச்சென்றனர். நள்ளிரவில் வீடுதிரும்பும் போது பழனிக்குமார் காட்டு ஓடையான குண்டாறு அருகில் ஒரு கும்பலால் வழிமறைக்கப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டார். ‘‘எந்தத்தொகைதான் அல்லது எவ்வளவு பணம்தான் எங்களின் இழப்பிற்கு நஷ்ட ஈடாக முடியும். அவர்களால் என்மகனை உயிரோடு தரமுடியுமா’’ என்று கேட்கும் தங்கவேலின் கண்களிலிருந்து கொட்டும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தன் மகனை கொன்று குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

பச்சேரியில் வாழும் இனத்தவர்களின் தலைவராகிய A. மாரிமுத்து தங்களுடைய நீண்டகால கோரிக்கையான முக்கிய சாலைக்கு மாற்றுப்பாதை அமைத்துக்கொடுக்கவும் போதிய குடிதண்ணீர் வழங்கவும் ஆன வேண்டுகோள்களை அதிகாரிகள் கண்டுகொள்ளவே இல்லை என்று குற்றம் சாட்டினார். அந்த கிராமத்தின் உள்ளே ஒரே ஒரு கிணறு உள்ளது என்றும் அதன் தண்ணீர் சமீபகாலத்தில் அருகாமை கிராமத்தில் உள்ள யாரோ சிலரின் செயல்பாட்டினால் மாசுபட்டுபோய்விட்டது என்றும் கூறினார். ஆனால் அவர்களுடைய ஐயப்பாடுகளை நீக்கும் விதமாக மாவட்ட ஆட்சியர் வி.அருண்ராய் அந்த கிராமத்தை செப்டம்பர் 14ஆம் தேதி பார்வையிட்டார். அவர்கள் முன்னிலையிலேயே அக்கிணற்றில் இரைத்துக் கொண்டுவரப்பட்ட தண்ணீரைக் குடித்தார்.

கடந்த வருடம் வரை பச்சேரியைச் சேர்ந்த 60 குழந்தைகள் அருகிலுள்ள ஊரில் உள்ள மேல்நிலைப்பள்ளியில் படித்து வந்தனர். ஆனால் இந்த வருடம் பெரும்பாலான குழந்தைகள் அங்கிருந்து ஆனைக்குளம் கிராமப் பள்ளிக்கு போய் விட்டார்கள். ஏனென்றால் இந்த குழந்தைகள் மீது பாரபட்சம் காட்டும் பழக்கவழக்கங்கள் இருந்ததால் என்று கே.முத்துக்கருப்பன் என்பவர் கூறினார். ‘‘கடந்த 4 வருடங்களாக தியாகி இம்மானுவேல் சேகரனின் குருபூஜையில் பங்கெடுத்து வந்தோம் ஆனால் இந்த முறை பரமக்குடிக்கு செல்லாதவாறு அதிகாரிகளால் தடுக்கப்பட்டு விட்டோம்’’ என்று எம். சேகர் எனும் வேறு ஒரு கிராமவாசி கூறினார். மாவட்ட அதிகாரிகள் கிராமத்தினர்களுக்கு புதியசாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பச்சேரி மக்களுக்கு கூறினர். மேலும் பிளாஸ்டிக் தொட்டிகளின் மூலம் குடிதண்ணீர் அளிக்கப்படும் என்று உறுதி அளித்தனர்.

பழனிக்குமாரின் பெற்றோர்களாகிய தங்கவேல் புவனேஸ்வரி தம்பதிகளுக்கும் அவர்கள் குழந்தைகளான T.முனுசாமி, T.விக்னேஸ்வரன், T.சூர்யா மற்றும் T.மகேஸ்வரிக்கு ஆறுதல் என்பது எட்டாததாகவும் நீண்ட துன்பப் பயணமாகவும் இருக்கிறது. அரசு அளித்த 1 லட்சம் ரூபாய் நஷ்டஈடுதனை பழனிக்குமாரின் பெற்றோர்களை பெற்றுக்கொள்ள வைப்பது மாவட்ட ஆட்சியரின் கடினமான பணியாக இருக்கும். அவர்கள் தங்கள் மகனை இந்தப் பணம் கொண்டுவந்து சேர்க்காது என்று சொல்லி மறுத்து வருகிறார்கள். மாவட்ட ஆட்சியர் பழனிக்குமாரின் பெற்றோரிடம் குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் நீதிக்குமுன் கொண்டுவந்து நிறுத்தப்படுவார்கள் என்று உறுதி அளித்திருக்கிறார்.

**Courtesy – Frontline (October 2011)**

# காஷ்மீரத்து கல்லறைகளிலுள்ள 2156 அடையாளம் காணாத சடலங்கள், உயிர் அணு சோதனைக்கு செல்ல வேண்டியுள்ளது

– சுஜாத்புக்காரி

**உரிமைகுழு 38 இடங்களில் புதைக்கப்பட்ட அடையாளம் தெரியாத சடலங்களை அடையாளங்கள் கண்டுபிடிக்க விரும்புகிறது.**

**ஸ்ரீநகர்** : ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசின் மாநில மனித உரிமை ஆணையம் (SHRC) வட காஷ்மீரிலுள்ள குறிப்பிடப்படாத கல்லறைகளில் புதைக்கப்பட்டுள்ள 2156 சடலங்களின் அடையாளங்கள் கண்டுபிடிக்கப்படவேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. இந்த கல்லறைகள் கடந்த மாதம் காவல்துறை குழுவின் புலன்விசாரணை மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற நீதிபதி செய்யதுபஹ்ருதின் மற்றும் ஜாவதுஅகமத் ஹவுஸ் இருவரின் தலைமையில் அமைந்த மாநில மனித உரிமை ஆணையத்தின் டிவிசன் பெஞ்ச் வெள்ளிக்கிழமையன்று ஒரு ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையில் உயிரணுச் சோதனைகள் போன்ற வழிமுறைகளின் மூலம் காஷ்மீரின் 38 இடங்களில் புதைக்கப்பட்ட சடலங்களின் அடையாளங்கள் ஊர்ஜிதம் செய்யப்படவேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டது.

இந்த பெஞ்ச் 6 விதமான சிபாரிசுகளை மாநிலத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய பிரச்சனைக்காக பரிந்துரைக்கின்றது. “குறிப்பிடப்படாத இந்த கல்லறைகளிலுள்ள உடல்கள் எந்தவிதமான வழிமுறைகள் மற்றும் தொழில் நுட்பம் மூலமாக அடையாளம் காணப்பட வேண்டும் என்று கூறுகிறது. உதாரணமாக உயிரணு சோதனைமுறை, உடலியல் விசாரணை, பல்கட்டமைப்பு பரிசோதனை, மருத்துவ மூலக்கூறுகள், கைரேகைகள், கார்பன் டேட்டின், தடவியல் நோய்குறியியல் போன்றவைகளின் மூலம் கண்டறியப்படவேண்டும்”.

இப்பரிசோதனைகளில் முக்கிய நோக்கம் என்னவென்றால் “காணாமல் போனவர்கள்” அடையாளங்களோடு மேற்சொன்னவைகள் பொருந்துகிறதா என்று பார்க்க வேண்டும். காஷ்மீர் மாநிலத்திலுள்ள மனித உரிமை அமைப்புகள் காஷ்மீர் வாசிகள் 1990 ஆம் வருடத்திலிருந்து “ஆயிரக்கணக்கில்” காணாமல் போனதாக சொல்லப்பட்ட எண்ணிக்கைகள் உண்மையிலேயே உண்மையானவைகளாகும். காணாமல் போனவர்களின் பெற்றோர் அமைப்பு 350 பேர்களை குறிப்பிட்டுக் கூறுகிறது. மாநில அரசாங்கம் 1200 குடியிருப்போர்களை “காணவில்லை” என்று ஒத்துக்கொள்கிறது.

காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் சங்கம் என்ன சொல்கிறது என்றால் பாதுகாப்பு படையினரால் சட்டத்திற்கு புறம்பாக காணாமல் போனவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுகிறது. மாநில அரசோ காணாமல் பொனவர்களில் பெரும் எண்ணிக்கையினர் இளைஞர்கள் அவர்கள் எல்லைக்கோட்டை தாண்டி பயங்கரவாதிகளுடன் சேர்வதற்காக சென்றவர்கள் என்று கூறுகின்றது. குடும்பத்தில் அவர்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் உயிரணுப் பரிசோதனைகள் என்ன காரணத்திற்காக இந்த நபர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்னும் விவாதத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவந்து விடாது. உதாரணமாக கொல்லப்பட்டது உண்மையான காரணத்திற்காகவோ அல்லது பொய்மையின் அடிப்படையிலா என்று அறியும் போது அது மத்திய மாநில அரசுகளை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தும்.

ஆகஸ்ட் 20ல் வெளிவந்த மாநில மனித உரிமை ஆணையத்தின் புலன் விசாரணையின் முதல் அறிக்கை 2730 கல்லறைகள் பாரமுல்லா, பந்திப்பூர் மற்றும் குக்வாரா மாவட்டங்களில் உள்ளதாக சொல்லுகிறது. 574 நபர்கள் உள்ளூர் வாசிகளால் ஆனது என்றும் 2156 சடலங்கள் அடையாளம் காணப்படாமல் இருப்பதாகவும் சொல்லுகிறது. ஆணையம் உயிரணுசோதனைகளோடு நவீன அறிவியல் தொழில் நுட்பங்களையும் இணைத்து அடையாளங்கள் பற்றிய விவரங்கள் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடுகிறது.

சடலங்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர், கொல்லப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் உயிர் இழப்பு நேர்ந்த குற்றத்திற்காக சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறுகிறது.

மேலும் இந்த ஆணையத்தின் அறிக்கையில் காணாமல் போய் அடையாளம் காணப்பட்ட நபர் இயற்கைக்கு மாறான விதத்தில் மரணத்தை தழுவியிருந்தால் அதற்கான நஷ்ட ஈடும் நீதியின் வழி வழங்கப்பட வேண்டும், என்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

பெரிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண "ஒரு சுதந்திரமான பிரதிநிதித்துவ அமைப்பு ஒன்று வெகு விரைவில் உருவாக்கப்பட்டு செயல்பட வேண்டும் என்றும் இந்த பெஞ்ச் அறிவுறுத்தியிருக்கின்றது.

## மயான உண்மைகள் : அடுத்து என்ன ?

★ பாதுகாப்பு படை சொல்வது என்னவென்றால் இறந்தவர்கள் அனைவரும் மோதல் சாவுகளில் உயிரிழந்த பயங்கரவாதிகள்

★ உயிரணு சோதனைகள் அடையாளம் காணப்படாத சடலங்களில் மேற்கொள்ளப்படும்.

★ இது காணாமல் போனவர்களின் குடும்பத்தினரின் உயிரணுச் சோதனையுடன் ஒப்பிடப்படும்.

★ இந்த சோதனைகள் மூலம் பொருத்தம் கண்டுபிடிக்கப்பட்டால் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் பாதுகாப்பு படைகளின் மீது குற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்த வழி இருக்கிறது.

## சிறைச் சாலைகள் செம்மையுற

உலகம் முழுவதும் நேற்று மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. நாட்டில் உயர் தலைவர்கள் தொடங்கி அனைவரும் மகளிர் தினத்தையொட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இந்த ஆண்டு மகளிர் தினத்திற்கென்று தனிச்சிறப்பு உண்டு. உலகம் முழுவதும் உள்ள பெண்கள் தங்களின் உரிமைகளைப் பெற, பெற்ற உரிமைகளைக் காத்திட என இந்நாளை (மார்ச் 8) முடிவு செய்து கொண்டாடத் தொடங்கிய நூற்றாண்டு விழா இந்த ஆண்டில் கொண்டாடப்பட்டது.

இன்றும் தொடரும் கொடுமைகளுக்கு முடிவு கட்ட, பெண்களுக்கெதிரான தாக்குதல்களை, பெண்சீண்டல்களை முடிவுக்குக் கொண்டுவர எனப் பல்வேறு கோரிக்கைகள், அந்தக் கோரிக்கைகளை வென்றிடப் போராடச் சூளுரைத்தல் ஆகியவை நடந்தேறியுள்ளன. அறிவு வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி எனப் பல்வேறு துறைகளிலும் நம்நாடு முன்னேறி வரும் நிலையிலும், பெண்கள் சம்பந்தப் பட்ட விஷயத்தில் போதிய முன்னேற்றத்தை எட்டி விட்டோம் என நாம் நெஞ்சுயர்த்திக் கூற முடியவில்லை. சமவேலைக்கு சம ஊதியம் என்பது எல்லாப்பணிகளுக்கும் எல்லாத் துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படவில்லை. பெண்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை. இளம் பெண்ணாக இருந்தால் ஆபத்துகள் நிழல் போலத்தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளதே தவிர, நாடாளுமன்றம், சட்ட மன்றங்களில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய 33 சதவீத இட ஒதுக்கீடு என்பது இன்று எட்டாக் கனவாகவே உள்ளது.

இந்தப் பின்னணியில், தமிழகத்தின் இரு சிறைச் சாலைகளில் தண்டனை அளிக்கப்பட்டும், விசாரணைக்காவும் அடைக்கப்பட்டுள்ள பெண்களின் நிலைபற்றி அதிர்ச்சி செய்திகள் அண்மையில் வெளியாகியுள்ளன. குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கி, அவர்களை திருத்துவதற்காகவே சிறைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த நிலை எங்கும் இல்லை என்பதே உண்மை நிலை. பெண்களுக்கென்று தனி சிறைச்சாலைகள் உள்ளன. தமிழகத்தில் திருச்சியிலும், நிலக்கோட்டையிலும் மகளிர் சிறைகள் உள்ளன. திருச்சி மகளிர் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பெண், சோதனை என்ற பெயரால் இதர விசாரணைக் கைதிகள் முன்னிலையில், நிர்வாணப்படுத்தப்பட்டுள்ளார். இதைவிடக் கொடுமை, சிறையில் உள்ள ஒரு மருத்துவர், பெண் கைதிகள் உடல்நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவம் பார்த்துக்கொள்ள வந்தால், அவர்களை எயிட்ஸ் நோயாளிகள் என்று கூறி வெளியே விரட்டி விடுகிறாராம். தன்னோடு சிறையில் அடைக்கப்பட்ட, தனது இளம் வயது மகனை சிறையிலிருந்து வெளியே அனுப்ப ஒரு பெண் தனது 25 சவரன் நகையை காவல்துறைக்கு அளித்ததாகக் கூறியுள்ளார். கைக்குழந்தைகளோடு சில பெண்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். இந்தக் குழந்தைகளுக்கு, பால் கிடைக்க வேண்டுமானால், சிறை வார்டர்களுக்கு கையூட்டுத்தர வேண்டிய நிலை உள்ளது. இளம் பெண்கள் சிறையில் பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாக்கப் படுவதாகவும் சில புகார்கள் உள்ளன. சிறைச் சாலைகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்வதற்கென சிலர் நியமிக்கப் படுகின்றனர். ஆனால் இவர்கள் சிறை அதிகாரிகளோடு சென்றுதான் தங்களின் ஆய்வை மேற்கொள்ள வேண்டியுள்ளது. சிறை ஆய்வுக்கென வருவோரிடம் சிறைவாசிகள், தங்களுக்கிழைக்கப்படும் கொடுமைகள் குறித்தோ, தாங்கள் படும் துன்பங்கள் குறித்தோ, சிறையில் நிலவும் லஞ்சக் கொடுமைகள் குறித்தோ புகார் கூற முடியாத நிலை உள்ளது. சிறையில் உள்ளோர் எவ்வாறு நடத்தப்பட வேண்டும், அவர்களுக்குத் தரப்படும் உணவு எவ்வாறு இருக்க வேண்டும் என்ற விதிகள் அடங்கிய தனி புத்தகமே உள்ளது. ஆனால் எந்தச் சிறைச்சாலையிலும் இது பின்பற்றப்படுவதில்லை.

சிறைச்சாலையை அறச்சாலைகளாக்கிச் சிறையில் அடைக்கப்பட்டோர் திருந்தி வெளியில் வர, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். குறிப்பாக சிறைவைக்கப்படும் பெண்கள் மரியாதையுடன் நடத்தப்பட உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- ஜனசக்தி, 9.3.2011

# புதைக்கப்பட்ட அநீதி

**ஆயிரக்கணக்கான அடையாளங்காணமுடியாத கல்லறைகள் காஷ்மீரில் உள்ளதாக அலுவலக அறிக்கைகள் உறுதிப்படுத்துவது உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.**

மக்கள் அமைப்புகள் கண்டுபிடித்த உண்மைகள் அலுவலக அறிக்கை மூலம் உறுதிபடுத்தும்போது அரசு வேறு வழியில்லாமல் செயல்பட்டுத் தீரவேண்டியதாகி விடுகிறது. சில அமைப்புகளான, காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் அமைப்பு (APDP) மற்றும் ஜம்மு காஷ்மீர் குடிமக்களின் கூட்டமைப்பு (JKCCS) போன்றவைகள் காஷ்மீரிலுள்ள பாதுகாப்பு பிரிவினரால் கொண்டு செல்லப்பட்ட எட்டாயிரம் நபர்கள் "காணாமல் போனவர்கள்" என்றும் அவர்களைப்பற்றி புலன்விசாரணை செய்ய வேண்டுமென்று பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றன. மேலும் அவர்கள் காஷ்மீர் மாநிலத்தில் உள்ள அடையாளம் தெரியாத உடம்புகளை சுமந்து கிடக்கும் குறிப்பிடப்படாத கல்லறைகளை குறிப்பிட்டு சுட்டிக்காட்டி காணாமல் போனவர்களுக்கும் இந்த கல்லறைகளுக்கும் உள்ள தொடர்பை கவனத்திற்கு கொண்டுவரவும் செய்கிறார்கள்.

**2373 அடையாளம் தெரியாத உடல்கள், குறிப்பிடப்படாத கல்லறைகளில் காஷ்மீரிலுள்ள பந்திபூரா, பாராமுல்லா மற்றும் குப்புவாரா மாவட்டங்களில் 57 இடங்களில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

ஏப்ரல் 2008–ல் (APDP) காணாமல் போனவர்களின் பெற்றோர்களின் அமைப்பு பாமுல்லா மாவட்டத்தில் உள்ள கல்லறைகளை பரிசோதனை மேற்கொண்டு புதைக்கப்பட்ட உண்மைகள் என்ற தலைப்பில் ஒரு அறிக்கை வெளியிட்டது. இதற்குப்பின் 11 மாதங்கள் கழித்து ஆழமான மற்றும் கூர்மையான விரிவான அறிக்கை ஒன்று "புதைக்கப்பட்ட சாட்சிகள் : யாரென்று தெரியாத குறிப்பிடப்படாத காஷ்மீரிலுள்ள கல்லறைகள்" என்னும் தலைப்பில் காஷ்மீரின் நீதி மற்றும் பன்னாட்டு மக்களின் நியாய சபை அமைப்பினால் வெளியிடப்பட்டது. அந்த ஆவணத்தில் 2373 அடையாளம் தெரியாத உடல்கள், குறிப்பிடப்படாத கல்லறைகளில் காஷ்மீரிலுள்ள பந்திபூரா, பாராமுல்லா மற்றும் குப்புவாரா மாவட்டங்களில் 57 இடங்களில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில், இந்தக் கல்லறைகள் பற்றிய புகைப்பட சாட்சியங்களுடன், கல்லறைகளைத் தோண்டுபவர்களின் அத்தாட்சி சான்றிதழும் இருந்தது. பாதுகாப்புப் படையினர் வழக்கமாக இரவில் அந்த அடையாளம் இல்லாத சடலங்களைக் கொண்டுவந்து கொல்லப்பட்ட தீவிரவாதிகள் என்றும், அவர்களை அடையாளம் காணமுடியவில்லை என்றும் சொல்லி உள்ளூர்வாசிகளை இந்தக் கல்லறைகளில் புதைக்கச் சொல்வதாக அறிக்கை கூறுகிறது. வருடக்கணக்காக இந்தக் கல்லறைகள் பற்றித் தெரியும் என்றாலும், காஷ்மீரில் நிலவும் பயம் காரணமாகவும், அச்சுறுத்தி பணியவைப்பதின் காரணமாகவும் யாரும் இதைப்பற்றி பேசத்துணிவதில்லை. தண்டனை, தீங்கிழைப்பு போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் படைக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதன் காரணமாக 1989 முதல் 2009 வரை நடந்தவைகளை இந்த அறிக்கைகள் மொத்தமாக சேகரித்து பொதுமக்களின் பார்வைக்கு கொண்டுவந்திருக்கிறது. தற்பொழுது மாநில மனித உரிமை ஆணையம் (SHRC) பன்னாட்டு மக்கள் உரிமை அமைப்பு கொண்டு வந்தவைகளை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. ஜம்முகாஷ்மீர் மாநிலத்திலுள்ள ஆணையம் இந்த அறிக்கைகளில் கண்டுள்ளவற்றைப் பற்றி புலன் விசாரணை செய்ய ஒரு மூத்த காவல்துறை கண்காணிப்பாளரின் தலைமையின் கீழ் ஒரு குழு அமைத்து சிறப்புப் புலன் ஆய்வுக்குழு என்ற பெயரில் (SIT) பாரமுல்லா, பந்திபோரா, குப்புவாரா, வந்துவாரா மாவட்டங்களிலுள்ள கல்லறைகளை ஆராயுமாறு ஆணையிட்டிருக்கிறது. மூன்று வருடங்கள் புலன் விசாரணைக்குப்பின் இந்த சிறப்புக் குழுவின் அறிக்கை சமீபத்தில் குடிமை, உரிமை அமைப்பு தகவல்பெறும் சட்டத்தின் கீழ் வெளிக்கொணர்ந்து பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறது.

இந்த சிறப்புக் குழுவின் அறிக்கை IPTK ஏற்கனவே வெளியிட்ட அறிக்கையில் கண்டவைகளை உறுதிப்படுத்தியதோடு எண்ணற்ற அடையாளம் தெரியாத

சடலங்கள் 38 இடங்களில் உள்ளது பற்றியும் கூறுகிறது. மாநில மனித உரிமை ஆணையத்தின் அறிக்கையில் 2730 அடையாளம் தெரியாத சடலங்களை கண்டறிந்திருக்கிறது. இவற்றில் 574 சடலங்கள் உள்ளூர் வாசிகள் என்றும் அடையாளம் காணப்பட்டிருக்கிறது. எனவே 2156 சடலங்கள் அடையாளம் காணப்படவேண்டும். IPTK அமைப்பு புதைக்கப்பட்ட பிணத்தைப் பரிசோதிப்பதற்காகத் தோண்டி எடுக்கவோ அல்லது தடய புலன் ஆய்வு செய்யவோ தயாராக இல்லை. எனவே அவர்களால் எந்தக் கல்லறையில் இருப்பது எந்த உள்ளூர்வாசியின் உடல் என்று அறுதியிட்டுக் கூறமுடியவில்லை.

**குடிமை அமைப்புகள் கேட்டதைப்போன்றே உயிரோடு உள்ளவர்களின் உயிரணுக்களோடு ஒத்துநோக்கி தடய அறிக்கைகள் மூலம் சாவுகள் எப்படி நேர்ந்தது என்பதை அதாவது துப்பாக்கி சூட்டினாலா, அல்லது சித்ரவதையின் காரணமாகவா என்று கண்டறிய வேண்டும்.**

இந்த எண்ணிக்கைகள் எல்லாம் கடலுக்கு மேலே தெரியும் பனிக்கட்டியைப்போன்றது. கணக்கில் வராததை இன்னும் எத்தனையோ மாநில மனித உரிமை ஆணையம் காஷ்மீர் மாநிலத்தின் 4 மாவட்டங்களில்தான் புலன் விசாரணை மேற்கொண்டதாகத் தெரிகிறது. மற்ற மாவட்டங்களில் சோபியன், ஸ்ரீநகர், அனந்நாக், பட்ஹாம், பென்டேபால், போடா, பூஞ்சி மற்றும் இராஜவுரி மாவட்டங்களில் இதுபோன்று நிறைய இருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கின்றது. மேலும் இந்த அறிக்கை சொல்வது என்னவென்றால் ‘‘அடையாளம் தெரியாத இந்த சடலங்கள் (2156) பல்வேறு கல்லறைகளில் புதைக்கப்பட்டிருப்பது ஒரு வேளை கட்டாயமாகக் காணாமல் போகச்செய்ததின் காரணமாகக் கூட இருக்கலாம்’’ என்று கூறுகிறது. மேலும் ‘‘ஜனநாயக மனித உரிமை மற்றும் சட்டத்தை மதிக்கும் மாநிலமாக இருப்பதாக காஷ்மீர் இருக்கும் பட்சத்தில் மாநிலத்தின் கடமையில் ஒன்று என்னவென்றால் காணாமல் போனவர்களின் சடலங்களா இவை என்னும் சந்தேகத்தை நீக்க வேண்டிய கடமையாகும்’’ என்று சொல்கிறது.

மாநில மனித உரிமை ஆணையத்தின் அறிக்கை இரண்டு விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாவது IPTK–யின் அறிக்கையை அது ஒத்துக்கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, 574 சடலங்கள் உள்ளூர்வாசிகளுடையது என்று உறுதிபடுத்துவதன் மூலம் காணாமல் போனவர்களுக்கும் குறிப்பிடப்படாத கல்லறைகளுக்கும் இருக்கும் தொடர்பை நிலைநாட்டி இருக்கிறது. குடிமை அமைப்புகள் கேட்டதைப்போன்றே உயிரோடு உள்ளவர்களின் உயிரணுக்களோடு ஒத்துநோக்கி தடய அறிக்கைகள் மூலம் சாவுகள் எப்படி நேர்ந்தது என்பதை அதாவது துப்பாக்கி சூட்டினாலா, அல்லது சித்ரவதையின் காரணமாகவா என்று கண்டறிய வேண்டும். அப்படிக் கண்டறிவதன் மூலம் இறந்து போனவர்களின் உறவினர்களுக்கு நீதி கிடைக்கச் செய்யவேண்டும் என்றும் கூறுகிறது. மாநில மனித உரிமை ஆணையத்தின் அறிக்கையை மாநில அரசாங்கத்திற்கு அலுவலக ரீதியாக சமர்ப்பிக்கப்பட்ட உடன் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். IPTK அறிக்கை கூறுவதுபோல போர்க்காலங்கள் மற்றும் கலகங்களின் போது சடலங்கள் மொத்தமாகப் புதைக்கப்பட்டதை சுட்டிக்காட்டுகிறது.

இது காரணமாக பதட்டநிலை தோன்றக்கூடும். ஆனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் காணாமல் போய் வெளியிலும் சொல்லமுடியாமல் துன்பப்பட்டதையும் பதட்டப்பட்டதையும் ஒப்பிடும்போது இது ஒன்றும் அவ்வளவு பெரியது இல்லைதான். இதில் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது பெண்கள் அதிலும் தங்கள் கணவர்கள் உயிரோடு இருக்கிறார்களா அல்லது இறந்துவிட்டார்களா என்பதை நிலைநாட்டமுடியாமல் பாதி விதவைகளாக இருக்கும் அவர்களின் நிலை மிகக்கொடூரமானது. நீண்ட நெடுங்காலமாக தகுந்த சாட்சியங்களோடு சொல்லப்பட்டும் கூட அரசு அமைப்புகள் மனித உரிமைகளை மீறியது பற்றி மாநில அரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருந்து விட்டது. இந்தத் தன்மை, காஷ்மீர் மக்களிடம் இந்திய அரசாங்கத்தின் மீது வெறுப்பு வளரக்காரணம் ஆகும்.

காணாமல் போனவர்கள் பற்றிய இந்தப்பிரச்சனைக்கு முடிவு காண்பதால் காஷ்மீரிலுள்ள அனைத்துப் பிரச்சனைகளும், முரண்பாடுகளும் தீர்ந்துவிடாதுதான். ஆனால் இது ஒரு முதல்படி. பாதுகாப்பு என்னும் பேரில் அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்தப்படும் மன்னிக்க முடியாத தவறுகளை ஒப்புக்கொள்வது சமரசத்திற்கான நிகழ்வுப் பாதை என்று ஜம்மு மற்றும் காஷ்மீரின் முதலமைச்சர் உமர் அப்துல்லா கூறி இருக்கிறார்

**Courtesy – Economic & Political weekly (August 2011)**

# குடும்ப வன்முறைச் சட்டத்தில் விடுபட்ட விஷயங்கள்

– பூமிகா ஜாம்ப்

நீண்ட நெடும் போராட்டத்திற்குப் பிறகு குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் (PWDVA) கொண்டுவரப்பட்டு 5 ஆண்டுகள் கடந்து விட்டன. எனினும், இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நிதியை மத்திய அரசு இன்னும் ஒதுக்கவில்லை. 'பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் ஒழிப்புக் குழு' என்ற அமைப்பு தனது மாநாட்டின் நிறைவில் இந்த சட்டத்தை பாராட்டிய அதே நேரத்தில், இதனை செயல்படுத்துவதற்கு போதுமான நிதியை மத்திய அரசு வழங்காமலிருப்பது குறித்துத் தனது கவலையையும் வெளிப்படுத்தியது. போதுமான தகவல்கள் இல்லாததாலும், செயல்படுத்துவதற்கான சரியான ஏற்பாடுகள் இல்லாததாலும் சட்டம் தனது நோக்கத்தை இன்னும் அடையமுடியாமல் இருக்கிறது என்று இந்திய அரசு (2010) தெரிவித்திருக்கிறது.

மத்திய அரசு நிதி ஒதுக்காத நிலையில் இந்தச் சட்டம் எப்படி செயல்படுத்தப்படுகிறது? நிதி ஒதுக்குவதற்கு மாநில அரசுகள் உருவாக்கியுள்ள வழிமுறைகள் என்ன? செலவினத்தின் நிலை என்ன? நிதி ஒதுக்கீட்டிற்கான குறிப்பான உட்பிரிவுகள் என்ன? அடையாளப்படுத்தக்கூடிய அளவில் இது எங்காவது சிறப்பான முறையில் செயல்பட்டிருக்கிறதா? இறுதியாக, சட்டத்தைச் செயல்படுத்துவதில் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு எவ்வாறு உதவ முடியும்?

இக்கேள்விகளுக்கு பதிலளிக்க இக்கட்டுரை முயல்கிறது. அனைத்து மாநிலங்களிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட புள்ளி விவரங்கள்[1] இணைக்கப்பட்டுள்ளன. சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாநில அரசுகள் ஒதுக்கியுள்ள ஒட்டுமொத்தமான நிதி குறித்து முதல் பிரிவு ஆராய்கிறது. இரண்டாவது பிரிவு நிதி ஒதுக்கீடுகளை ஆழமாக ஆராய்கிறது. மூன்றாவது பிரிவு உத்தேசிக்கப்பட்டுள்ள மத்திய நிதி உதவியுடனான திட்டம் (சிஎஸ்எஸ்) குறித்து விமர்சனக் கண்ணோட்டத்தோடு ஆராய்கிறது. இறுதியாக கொள்கைகள் தொடர்பான சில பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

## 1. ஒட்டுமொத்த ஒதுக்கீடுகள்

குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தை 2008 – 09, 2009 – 10, 2010 – 11 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்த மாநில அரசுகள் தங்களது நிதிநிலை அறிக்கைகளில் ஒதுக்கிய நிதி ஒதுக்கீடுகள் குறித்து அட்டவணை – 1 கூறுகிறது. 2008 – 09, 2009 – 10 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட செலவுகள் குறித்தும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அட்டவணையிலிருந்து பின்வரும் தகவல்களை அறியலாம்.

28 மாநிலங்களில் 15 மாநிலங்கள் இச்சட்டத்திற்காக என தனி நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளன. ஆந்திரா, அருணாச்சல பிரதேசம், அசாம், தில்லி, ஹரியானா, கர்நாடகம், கேரளம், மத்தியப்பிரதேசம், மேகாலயா, ஒரிசா, பஞ்சாப்,சிக்கிம், தமிழ்நாடு, உத்தர்கண்ட், மேற்குவங்கம் ஆகியவை இவற்றில் அடங்கும். 2009ம் ஆண்டு வரையில் இதற்கென தனி நிதி ஒதுக்கீடு செய்யாத ஒரிசா மாநிலம் 2010க்கான நிதிநிலை அறிக்கையில் இதனைச் சேர்த்திருப்பது ஊக்கமளிப்பதாக இருக்கிறது.

பெரும்பாலான மாநில அரசுகள் இச்சட்டத்தை செயல்படுத்துவதற்கென மாநிலத் திட்டங்களை உருவாக்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, ஹரியானா மாநிலம் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாப்பதற்கான (இதற்கென தனி பிரிவுகளை ஏற்படுத்துவதன் மூலம்) ஒரு சிறப்புத் திட்டத்தை தொடங்கியுள்ளது. அதேபோல் 2008ம் ஆண்டில் இச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக என 'உஷா கிரண் யோஜனா' என்ற திட்டத்தை மத்தியப்பிரதேசம் தொடங்கியது. இதில் தனித்து விளங்கும் ஒரிசா மாநில அரசு “78354” என்ற ஒரு தனி குறியீட்டு எண்ணை உருவாக்கியிருக்கிறது. தமிழ்நாடு அரசு, திட்டமல்லாத பிரிவின்கீழ் பாதுகாப்பு அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சு ஊழியர்களுக்கான ஊதியத்திற்காக பட்ஜெட் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இங்கு கவனிக்கப்படவேண்டிய விஷயம் என்னவெனில் ஒரு மாநில அரசு இந்த செலவினம் தேவையில்லை என்று கருதுமானால் எப்போது வேண்டுமானாலும் இதை நிறுத்திக்கொள்ள முடியும். ஒரிசாவிலிருப்பதுபோல் ஒரு தனி குறியீட்டு எண் இருக்குமானால் அது தொடர்ச்சியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதற்கு ஓரளவேனும் நம்பகமான ஏற்பாடாக இருக்கும்.

இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தனி நிதி ஒதுக்கீடு செய்யாத 12 மாநிலங்கள் உள்ளன. பீகார், சத்தீஷ்கர், கோவா, குஜராத், இமாச்சலப்பிரதேசம், ஜார்கண்ட், மகாராஷ்டிரம், மிஜோரம், நாகாலாந்து, ராஜஸ்தான்,

உத்தரப்பிரதேசம் [2] ஆகியவை உள்ளிட்ட 12 மாநிலங்கள் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. எனினும் குஜராத், இமாச்சலப்பிரதேசம், மகாராஷ்டிரம், நாகாலாந்து 2008 முதல் 2010 வரையிலான மூன்றாண்டு காலத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பயிற்சி மற்றும் சட்டத்தின் இதர சில ஏற்பாடுகளுக்கான தொகைகளை ஓரளவுக்குச் செலவிட்டுள்ளன. அதே நேரத்தில் அருணாச்சலப் பிரதேசம், பீகார், சத்தீஷ்கர், கோவா, ஜார்கண்ட், மிஜோரம், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் ஆகிய 8 மாநிலங்கள் பயிற்சி, விளம்பரம் ஆகிய நோக்கங்களுக்காகக் கூட ஒரு துணை நிதி ஒதுக்கீட்டைக்கூட செய்யவில்லை. இத்தனைக்கும் இந்த மாநிலங்களில்தான் குடும்ப வன்முறைகள் மிக அதிக அளவில் நிகழ்கின்றன. (ஆதாரம்: தேசிய குடும்ப சுகாதார ஆய்வு, 2005 – 06). இருந்தபோதிலும் இந்த மாநிலங்கள் தங்களிடம் ஏற்கெனவே உள்ள மகளிர் நல திட்டங்களின் மூலமாக இச்சட்டத்தின் பல்வேறு பிரிவுகளை செயல்படுத்துவதற்கான செலவுகளை செய்யமுடிகிறது என்று கூறிக்கொள்கின்றன. உதாரணமாக பீகார் மாநில அரசு தனது 'நாரி சக்தி' திட்டத்தின் மூலம் இச்சட்டத்திற்காகவும் இதர சில நடவடிக்கைகளுக்காகவும் என ரூ.10 கோடி ஒதுக்கியிருப்பதாகக் கூறுகிறது. அதேபோல் சத்தீஷ்கர் மாநிலத்தில் மஹிளா ஜாக்ருதி ஷிவீர் என்ற திட்டத்தின் கீழ் சிற்றூர், வட்டாரம், மாவட்டம் ஆகிய மட்டங்களில் பல்வேறு திட்டங்களின் கீழ் தங்களுக்குள்ள பொறுப்புகள் குறித்து மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. இந்த முகாம்களில் குடும்ப வன்முறை என்பதும் சேர்க்கப்பட்டிருக்கிறது என சம்பந்தப்பட்ட அரசுத்துறை தெரிவிக்கிறது. 2010 – 11ம் ஆண்டில் இத்தகைய 2000ம் முகாம்களை (பயிலரங்குகள்) நடத்துவதற்காக என ரூ. 1 கோடியே 5 லட்சம் ஒதுக்கப்பட்டது. இன்னொரு பக்கத்தில் ஜார்கண்ட் மாநில அரசு வரதட்சணை ஒழிப்புத் திட்டம், சூனிய நடவடிக்கைகள் ஒழிப்புத்திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக இந்தச் சட்டத்திற்கான செலவுகள் செய்யப்படுவதாகக் கூறுகிறது.

### ஒதுக்கீடுகளின் எல்லை

இச்சட்டத்திற்காக என மாநில அரசுகள் எவ்வளவு நிதி ஒதுக்குகின்றன என்பது முக்கியமாக ஆய்வு செய்யப்படவேண்டிய ஒன்றாகும். முதல் அட்டவணை காட்டுவது போல இதில் விரிவான பல வேறுபாடுகள் உள்ளன. மேகாலயா மாநிலத்தில் 2010 – 11ல் மிகக் குறைந்த அளவாக ரூ.2 லட்சம்தான் ஒதுக்கப்பட்டது. இதே காலகட்டத்தில் கர்நாடக மாநில அரசு ஒதுக்கிய தொகை ரூ.722 லட்சம். கர்நாடக மாநிலத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு ஒரு பாய்ச்சல் வேகத்தில் அதிகரித்திருப்பதைக் கவனிக்க முடியும். இதற்கென முறையான, சுயேச்சையான பாதுகாப்பு அலுவலர்களை நியமிப்பதற்கு இந்த மாநில அரசு ஆலோசித்து வருகிறது. மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடுகளை ஒப்பிடுவது உண்மையான நிலவரத்தை நமக்கு உணர்த்தாது. ஏனென்றால் மத்திய மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் இச்சட்டத்தின் கீழ் செய்யப்படவேண்டிய நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக குறைந்தபட்ச அளவு எதையும் வரையறுக்கவில்லை.

**தமிழ்நாடு அரசு, திட்டமல்லாத பிரிவின்கீழ் பாதுகாப்பு அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சு ஊழியர்களுக்கான ஊதியத்திற்காக பட்ஜெட் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இங்கு கவனிக்கப்படவேண்டிய விஷயம் என்னவெனில் ஒரு மாநில அரசு இந்த செலவினம் தேவையில்லை என்று கருதுமானால் எப்போது வேண்டுமானாலும் இதை நிறுத்திக்கொள்ள முடியும்.**

### ஒதுக்கீடுகளும் செலவுகளும்

ஒதுக்கப்பட்ட நிதிகள் எந்த அளவுக்கு பயன்படுத்தப்பட்டன என்பதை மதிப்பிடுவது அவசியம். முதல் அட்டவணை காட்டுவதுபோல ஆந்திரம்,கேரளம், மேற்குவங்கம் ஆகிய மூன்று மாநிலங்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளை கிட்டத்தட்ட முழுமையாகச் செலவிட்டுள்ளன. இன்னொரு புறத்தில் பஞ்சாப் அரசு இதற்கென நிதி ஒதுக்கீடு செய்திருந்தாலும் அதிலிருந்து ஒரு சிறு தொகை கூட செலவு செய்யப்படவில்லை.

தில்லி, தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் 2008 – 09ஆம் ஆண்டில் கனிசமான அளவிற்கு செலவு செய்துள்ளன. எனினும் 2009 – 10ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகையின் விகிதாச்சாரம் சற்று குறைந்திருக்கிறது. மத்தியப் பிரதேச மாநிலத்தின் நிலைமையும் கவலையளிக்கிறது. இங்கு இந்த இரண்டு நிதியாண்டுகளிலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளில் 35 சதவீதம் மட்டுமே செலவிடப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் இங்கு 'உஷா கிரண் யோஜனா' என்ற முழுமையான திட்டம் 2008ல் கொண்டுவரப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் அங்கே இதுதான் நிலைமை. அந்த மாநிலத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்ற மாநிலங்களைப்போல

அல்லாமல் இங்கு இத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்கள் குறித்த விரிவான விளக்கங்களைத் தெரிவிக்கின்றன. மேலும் செலவு பிரிவுகளைப் பொறுத்தவரையில் நான்கு பிரிவுகளின் கீழ் செலவுகள் செய்யப்பட்டுள்ளன. அலுவலகச் செலவு, கருத்தரங்குகள் / பயிலரங்குகள், உதவி நிதி, இதர செலவுகள் என்பவையே அந்த நான்கு பிரிவுகள். உதவி நிதி என்ற பிரிவின் கீழ் அடைக்கல இல்லங்களுக்கு அளிக்கப்பட்ட நிதியும் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கு முன் எவ்வித அரசு நிதியும் பெறாத ஒவ்வொரு அடைக்கல இல்லத்திற்கும் இப்போது முதலாண்டில் ரூ. 2 லட்சம் உதவி நிதி வழங்கப்பட்டது. இரண்டாவது ஆண்டில், பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்த நிதி உயர்த்தப்படுகிறது. இரண்டாவதாக பாதுகாப்பு அலுவலர்களுக்கு ஆலோசனை, கூட்டம் நடத்துதல் போன்ற செலவுகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.10,000 வழங்கப்படுகிறது. போக்குவரத்துக்காக ரூ.5,000 வழங்கப்படுகிறது. விளம்பரப் பலகைகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.3,000, சுவர் ஓவிய விளம்பரங்களுக்காக ரூ.1,000 என வழங்கப்படுகிறது. இந்தச் செலவுகள் அனைத்தும் ''இதர செலவினங்கள்'' என்ற பிரிவின் கீழ் செய்யப்பட்டுள்ளன.

இரண்டாவது அட்டவணை காட்டுவதுபோல, உதவி நிதி என்ற பிரிவு மிகக் குறைவாகவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் 2008 – 09முதல் உதவி நிதி, அலுவலகச் செலவு ஆகியவற்றைத் தொடர்ந்து இதர செலவுகளுக்கான நிதியும் கடுமையான அளவிற்கு வெட்டப்பட்டு வந்துள்ளது. விரிவான வழிகாட்டுதல்களின் காரணமாக, பட்ஜெட் நிதி ஒதுக்கீடு என்பவை போதுமான அளவிற்கு விரிவானதாக இருப்பதுபோல் தெரிகிறது. ஆனால் செலவுகளைப் பார்க்கிறபோது, மாறுபட்ட நிலைமைதான் தெரியவருகிறது. முதல் அட்டவணை காட்டுவது போல, மத்தியப் பிரதேச மாநிலம் 2008–09, 2009–10 ஆகிய ஆண்டுகளில் மிகக் குறைவாகவே இந்த நிதியை பயன்படுத்தியிருக்கிறது. 2008–09ல் இது 37.2 சதவீதமாகவும், 2009–10ஆம் ஆண்டில் இது 34.2 சதவீதமாகவும் இருந்தது. 2008–09ஆம் ஆண்டில் செய்யப்பட்ட செலவு 37.2 சதவீதம். இது 2009–10ஆம் ஆண்டில் 34.2 சதவீதமாகச் சரிவடைந்தது.

## 2. குறிப்பான பிரிவுகளுக்கான நிதி

குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டதை நாடு முழுவதும் பெண்ணுரிமை இயக்கத்தினர் கொண்டாடினார்கள். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. ஒரு முக்கியக் காரணம், மேற்கொண்டு அநீதிகளுக்கு உள்ளாவதிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான முக்கியமான விதிகள் சட்டத்தில் இருக்கின்றன என்பதுதான். பாதுகாப்பு அலுவலர்கள் நியமனம், சேவைப் பணியாளர் பட்டியல் அறிவிப்பு, பாதுகாப்பு அலுவலர்களுக்கும் காவல்துறையினருக்கும் நீதித்துறையினருக்கும் இதர பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் பயிற்சி, திறன் வளர்ப்பு முகாம்கள் நடத்துவதற்கான ஏற்பாடு, விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டங்கள் போன்ற சில சாதகமான அம்சங்கள் சட்டத்தில் உள்ளன. ஆகவே, மாநில அரசுகள் போதிய நிதி ஒதுக்கீடுகளை செய்துள்ளனவா இல்லையா என்பதைக் கவனிப்பதோடு, எந்தப் பிரிவுகளின் கீழ் அந்த நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை கவனமாக ஆராய்வதும் முக்கியமானதாகும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் அடிப்படையில் கிடைத்துள்ள தகவல்கள், தனி பட்ஜெட் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டோ, அல்லது செய்யப்படாமலோ நிதி வழங்கியுள்ள மாநிலங்கள், பின்வரும் பிரிவுகளின் கீழ் பெருமளவிற்கு அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளன என்பதைக் காட்டுகின்றன:

**பாதுகாப்பு அலுவலர்கள்:**

நிதி ஒதுக்கீடுகளைப் பொறுத்தவரையில் கவனிக்கப்படவேண்டிய ஒரு முக்கிய அம்சம் பாதுகாப்பு அலுவலர்களின் செயல்பாடாகும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் நீதி அமைப்புக்குமிடையே இவர்கள்தான் முக்கியமான இணைப்பாக இருக்கிறார்கள். ஆகவே இவர்கள் முறையாகச் செயல்படுவதற்கு போதுமான நிதி ஒதுக்கப்படுவது என்பது மிகவும் அவசியமாகும். இவர்களது சிறப்பான செயல்பாட்டுக்கென மாநிலங்கள் எப்படி நிதி ஒதுக்கியுள்ளன என்பதைப் பின்வரும் அனுபவங்கள் காட்டுகின்றன.

- தமிழகத்தில் கணினிகள் வாங்குவதற்காக ரூ. 11 லட்சத்து 45 ஆயிரம் செலவிடப்பட்டது. 2008–09ல் பாதுகாப்பு அலுவலர் பயிற்சிக்காக ரூ.4லட்சம் செலவிடப்பட்டது. தனிப்பட்ட முறையில் நியமிக்கப்பட்டவர்களான பாதுகாப்பு அலுவலர்களுக்கும், இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சு ஊழியர்களுக்கும் (ஒவ்வொரு மாவட்டத்திலும்), முறையே ரூ. 15 ஆயிரம், ரூ. 6ஆயிரம் மாத ஊதியத்திற்காக ரூ. 78லட்சத்து12 ஆயிரம் செலவிடப்பட்டது. மேற்கு வங்க மாநிலத்திலும் பாதுகாப்பு அலுவலர்களின் ஊதியத்திற்காக 2009–10ல் ரூ.24 லட்சம் செலவிடப்பட்டது.

- பல மாநிலங்களில் தனிப்பட்ட பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை. ஆனால் அரசு அலுவலர்களுக்குக் கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் இந்த அலுவலர்களுக்கு உதவுவதற்காக என துணை ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான பொருள்கள் மற்றும் ஒப்பந்தப் பணிகளுக்காக என ஆந்திர மாநில அரசு எப்படி தொடர்ச்சியாக நிதியளித்து வந்திருக்கிறது என்பதை அட்டவணை–3 காட்டுகிறது. ஒப்பந்தப் பணிகளின் இதர பிரிவுகளைப் பொறுத்தவரையில் இயக்கக வட்டத்தில் மாதம் ரூ.5,500, ரூ.4,900 என்ற ஊதிய அடிப்படையில் தகவல் பதிவு கணினி ஊழியர் (டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர்) மற்றும் இளநிலை உதவியாளர் நியமிக்கப்படுகிறார்கள். அத்துடன் மாவட்டத்திற்கு இரண்டு ஆலோசகர்கள் வீதம் ரூ. 6,500 ஊதியத்தில் நியமிக்கப்படுகிறார்கள். எல்லா மாவட்டங்களிலும் மாதம் ரூ. 5,500 ஊதியத்தில் ஒரு தகவல் பதிவு கணினி ஊழியரும், ரூ. 3,000 ஊதியத்தில் இரண்டு தகவல் ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதே போல் கர்நாடக அரசு மாவட்டத்திற்கு ஒரு கணினி இயக்குநர், இரண்டு தகவல் ஊழியர்கள் என நியமித்துள்ளது. இவர்களது ஊதிய விகிதம் உயர்த்தப்பட்டு முறையே ரூ.5,000, ரூ.2,000 வழங்கப்படுகிறது. அத்துடன் அவசரச் செலவுகளுக்காக என 2008–09ல் இந்த மாநிலம் ரூ.4,000 வீதம் ஒதுக்கியிருக்கிறது.

---

**தில்லி, தமிழ்நாடு, மேற்கு வங்கம், ஹரியானா ஆகிய மாநிலங்களில் முழுநேர பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும்கூட இவர்கள் அனைவரும் ஒப்பந்த அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்தவொரு மாநில அரசும் நிரந்தர நியமனங்களைச் செய்யவில்லை. பல திட்டங்களில் இதுதான் நடைமுறையாக இருக்கிறது.**

---

- சட்டத்தின் செயல்பாட்டிற்கு என இந்த மாநில அரசு மாநிலத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகள் செய்கிறது. இந்தச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டங்கள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக பாலின விழிப்புணர்வுத் திட்டம் ஒன்று ஒரு முன்னோடித் திட்டமாக இந்த மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது. 2009–10ல் மொத்தம் ரூ.115லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் இச்சட்டத்தின் கீழ் ஏற்பட்ட செலவினங்கள் குறித்து விவரங்கள் அட்டவணை – 4ல் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த மாநிலத்தில் பாதுகாப்பு அலுவலர்களின் முறையான செயல்பாடுகளுக்காக என நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. இவர்களது அலுவல்சார்ந்த வாகனங்ளுக்காகவும் எழுதுபொருள்களுக்காகவும் இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது என்பது ஊக்கமளிக்கும் தகவலாகும்.

இதுவரை பார்த்த உதாரணங்கள் பாதுகாப்பு அலுவலர் செயல்பாட்டைப் பாதிக்கக்கூடிய விஷயங்கள் குறித்தும் நிதி நிலைமைகள் குறித்தும் போதிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. பயிற்சி, துணை ஊழியர்கள் நியமனம், எழுதுபொருள் – அலுவலக இடப்பரப்பு போன்ற உள்கட்டுமானம், போக்குவரத்துச் செலவு, அவசரச் செலவு போன்ற அம்சங்கள் இத்தகைய நிதி ஒதுக்கீடுகளில் இடம்பெற வேண்டும்.

எனினும் பெரும்பாலான மாநிலங்களில் ஏற்கெனவே உள்ள அலுவலர்களிடம்தான் பாதுகாப்பு அலுவலர் பணிகளுக்கான கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏற்கெனவே இவர்கள் குறிப்பிட்ட திட்டப் பணிகளைக் கவனித்து வருகிறார்கள் என்பதால், கூடுதலாக இத்தகைய பொறுப்புகளை வழங்குவது அவர்களது பணிப் பளுவைப் பல மடங்கு அதிகரித்து விடுகிறது. உதாரணமாக ராஜஸ்தான் மாநிலத்தில் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் திட்ட அலுவலர்களுக்கு பாதுகாப்பு அலுவலர் பொறுப்பும் தரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இவர்கள் சராசரியாக 200 முதல் 300 வரையிலான அங்கன்வாடி மையங்களை கவனித்து வருகிறார்கள். மேலும், பட்ஜெட் மற்றும் நிர்வாகப் பொறுப்பு கண்காணிப்பு மையம் இவ்வாண்டு நடத்திய ஒரு ஆய்வில், பாரன், ஜோத்பூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் போதுமான அளவிற்கு குழந்தை மேம்பாட்டு திட்ட அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளது. இதேபோல் இமாச்சலப்பிரதேச மாநிலத்தில் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களுக்கு

இப்பணிகள் கூடுதலாகத் தரப்பட்டுள்ளன. குழந்தை மேம்பாட்டுத் திட்ட அலுவலர்களைவிட இந்தக் கண்காணிப்பாளர்களின் தகுதி நிலை குறைவானதேயாகும். தங்களது பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உள்கட்டுமானங்கள் இல்லாதவர்களாகவே இவர்கள் பணியாற்றுகின்றனர். குஜராத் மாநிலத்தில் இந்தப் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு அலுவலர்களால், மாற்றுத்திறனாளிகளுக்கு கடன் உதவி வழங்குவதற்கான இலக்குகளை முழுமையாக எட்டமுடியவில்லை என்று 'பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான சவுராஷ்டிரா கட்ச் நிறுவனங்கள் அமைப்பு' மேற்கொண்ட ஒரு ஆய்வு (2009) எடுத்துக்காட்டுகிறது. எனவே முழுநேர பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதற்கான அவசரத் தேவை இருக்கிறது. குறைந்தது ஒவ்வொரு வட்டார அளவிலும் ஒரு பாதுகாப்பு அலுவலா் இருக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு உதவியாளரும் இருக்க வேண்டும்.

தில்லி, தமிழ்நாடு, மேற்கு வங்கம், ஹரியானா ஆகிய மாநிலங்களில் முழுநேர பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும்கூட இவர்கள் அனைவரும் ஒப்பந்த அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்தவொரு மாநில அரசும் நிரந்தர நியமனங்களைச் செய்யவில்லை. பல திட்டங்களில் இதுதான் நடைமுறையாக இருக்கிறது. தனியான பணியாளர் பிரிவு ஏற்படுத்தப்படாமலே பல்வேறு திட்டப் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலேயே பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். பொதுச் செலவினங்களை வெட்டிச் சுருக்குவதன் மூலம் பற்றாக்குறை நிலைமைகளை குறைக்க வேண்டும் என்று தற்போது திட்டம் சாராத செலவினங்கள் தொடர்பான கொள்கை அடிப்படையில் வலியுறுத்தப்படுகிறது. இந்தப் பின்னணியிலேயே இதனைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. நிலையான, தகுதியுள்ள பணியாளர்கள் மற்றும் போதுமான உள்கட்டுமானம் என்பதைப் பொறுத்தவரையில் மாநில அரசு கட்டமைப்பை ஓரளவுக்கு வலுப்படுத்துவதாகவே திட்டமல்லாத செலவுகள் பயன்பட்டுவந்துள்ளன. எனவே திட்டமல்லாத செலவுகளில் கணிசமான அளவிற்கு சரிவு ஏற்படுவது என்பது ஒட்டுமொத்த அரசாங்க எந்திர செயல்பாட்டை மோசமாகப் பாதிக்கவே செய்கிறது. குறிப்பாக திட்டங்களை அமலாக்குவதற்கான பணிகளில் இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மேம்பாட்டுப் பணிகளைப் பொறுத்தவரையில் திட்டமல்லாத செலவுகளை மாநில அரசுகள் அதிகரித்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் நாட்டில் ஒரு நிதிக்கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

## விளம்பரமும் பயிலரங்குகளும்:

இந்தச் சட்டம் குறித்து சுவரொட்டிகள், விளம்பரத் தட்டிகள், வானொலி விளம்பரங்கள் போன்றவற்றின் மூலம் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக என்றும் பல்வேறு செயல்பாட்டாளர்களுக்காகவும் பயிலரங்குகள் நடத்த என இரண்டாவது கட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உதாரணமாக குஜராத் மாநிலத்தில் 2008–09ல் எவ்வித நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. ஆனால் 2009–10ஆம் ஆண்டில் இந்த மாநிலம் இதே தலைப்பின் கீழ் ரூ. 25 லட்சம் வரை செலவிட்டுள்ளது. பிரச்சாரம், பயிற்சி, தகவல்கள், கல்வி, தகவல்தொடர்பு ஆகிய நோக்கங்களுடன் இந்த செலவுகள் செய்யப்பட்டுள்ளன. 2010–11ஆம் ஆண்டில் இதே நோக்கத்திற்காக என மாநில அரசு ரூ.15லட்சம் ஒதுக்கியது. நாகாலாந்து மாநிலத்தில் 2008–09ல் இந்தச் சட்டத்தை மாநில மொழியில் அச்சிடுவதற்காக என 2008–09ல் ரூ.2 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. சிக்கிம் மாநிலத்தில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதற்காக 2009–10ல் ரூ. 4 லட்சத்து 88 ஆயிரம் செலவிடப்பட்டது. இமாச்சலப் பிரதேச மாநிலம் 2009–10ல் திட்ட அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக என ரூ.2.30 லட்சம் செலவிட்டது.

எனினும், இந்த உட்கூறு நிதி தொடர்பாகச் சில பிரச்சனைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. முதலாவதாக, ஏற்கெனவே பார்த்ததுபோல 2008–09 முதல் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டத்திற்காக என பஞ்சாப் அரசு ரூ.50 லட்சம் ஒதுக்கீடு செய்து வந்துள்ளது. ஆனால் இந்த நிதி செலவிடப்படவேயில்லை. இரண்டாவதாக பல மாநிலங்கள் ஐ.இ.சி. திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்காக என நிதி ஒதுக்கீடு செய்துள்ளபோதிலும், அது ஒரு தொடர்ச்சியான நடவடிக்கையாக மாற்றப்படவில்லை. முதலில் பார்த்ததுபோல இந்தச் சட்டத்தை பயனுள்ள முறையில் செயல்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருப்பது இது குறித்த விழிப்புணர்வின்மைதான். இந்த சட்டம் முதன்முதலில் நடைமுறைக்கு வந்தபொழுது பல மாநிலங்கள் விழிப்புணர்வை பரப்புவதற்காகவும், பயிலரங்குகள் நடத்துவதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்தன. ஆனால் அதன்பிறகு எவ்வித நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. பெண்கள் உரிய தகவல் அறிவோடு முடிவெடுப்பதற்கு உதவும் வகையில் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். இந்தச் சட்டத்தை அந்தந்த வட்டார மொழிகளில் வெளியிடுவதற்கும், பரவலாக அதுகுறித்த தகவல்களைப் கொண்டு செல்வதற்கும், மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பிரச்சனையில் அச்சு ஊடகங்கள், மின்னணு ஊடகங்கள் இரண்டின் பங்களிப்பும்

கூட முக்கியமானதாகும். இறுதியாக, பல மாநிலங்கள் பாதுபாப்பு அலுவலர் பயிற்சிக்காக என நிதி ஒதுக்கீடு செய்துள்ள போதிலும், சட்டத்தைச் செயல்படுத்துவதில் தொடர்புள்ள இதர துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகிறது. உதாரணமாக மருத்துவ அலுவலர்கள், காவல்துறையினர், நீதித்துறையினர், பல்வேறு சேவைப்பிரிவுகளில் உள்ளோர் போன்றோருக்கு இத்தகைய விழிப்புணர்வு முயற்சிகள் தேவைப்படுகின்றன. இதற்காக ஐ.இ.சி.–யின் கீழ் தனி நிதி ஆதாரங்கள் ஏற்படுத்தப்படுவது அவசியமாகிறது.

### கண்டுகொள்ளப்படாத விஷயங்கள்:

இந்த சட்டத்தில், சேவை வழங்குவோருக்கான ஆதரவு நடவடிக்கைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆனால் அதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. பல மாநிலங்கள் ஏற்கெனவே ஸ்வாதர் திட்டம், நாரி நிகேதன் ஆகிய திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட பாதுகாப்பு இல்லங்களைத்தான் இந்தச் சட்டத்தின் கீழும் அறிவித்துள்ளன. ஸ்வாதர் திட்டம் என்பது, கைவிடப்பட்ட பெண்களுக்கென பாதுகாப்பு இல்லங்கள் அமைக்க மாநில அரசுகளுக்கு மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிற ஒரு திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள உண்மைச் செலவுகள் ஒட்டுமொத்த பட்ஜெட் மதிப்பீடுகளைவிட அதிகமாக உள்ளன என்று 'பட்ஜெட் மற்றும் நிர்வாகப் பொறுப்பு ஆய்வு மையம்' வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது. இப்படிப்பட்ட திட்டத்திற்கு பெரிய தேவை இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. இதற்கு நேர்மாறாக நாடு முழுவதுமாக 287 ஸ்வாதர் பாதுகாப்பு முகாம்கள்தான் உள்ளன என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அதாவது மாவட்டத்திற்கு ஒரு பாதுகாப்பு இல்லம் என்ற அளவில்கூட இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக 15 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள் என்ற பின்னணியில் பார்த்தால் இந்த பாதுகாப்பு இல்லங்கள் கொஞ்சமும் போதுமானவை அல்ல என்பது தெளிவாகும். குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின், ஸ்வாதர் இல்லங்கள் அறிவிக்கப்பட்டபின், இத்தகைய இல்லங்கள் போதுமான எண்ணிக்கையில் கட்டப்படுவதும், அவற்றின் சேவைத் தரத்தை மேம்படுத்தப்படுவதும் மிகவும் அவசியமாகிறது.

28 மாநிலங்களில் மத்தியப்பிரதேசம், சிக்கிம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்கள் மட்டுமே சேவைப் பணியாளர் (எஸ்பி) செயல்பாட்டிற்கு ஓரளவு துணையாக அமையக்கூடிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளன. சிக்கிம் மாநிலம் ஒவ்வொரு சேவைப் பணியாளருக்கும் ஒரு கவுரவத் தொகையாக ரூ.2,000 வழங்குகிறது. இதற்காக 2010–11ல் மொத்தம் ரூ. 2 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கேரளத்தில் சட்ட ஆலோசகர்கள் அல்லது வழக்கறிஞர்களை நியமித்து அவர்களுக்கு ரூ. 5,000 வழங்குகிறது. பெண்களுக்கு மருத்துவ உதவி வழங்கவும், மன நல ஆலோசனைகள் வழங்கவும் என சேவைப்பணியாளர்களுக்கு ரூ.10,000 வரை வழங்குகிறது. மத்தியப் பிரதேச மாநில அரசு இதுவரையில் அரசு நிதி உதவி எதையும் பெற்று வராத ஒரு அமைப்புக்கு ரூ. 2 லட்சம் வரை நிதி ஒதுக்கீடு செய்கிறது.

கவனிக்கப்படவேண்டிய மற்றொரு விஷயம், இந்தச் சட்டத்திற்காக என பட்ஜெட்டுகளில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதுபற்றி மிகக் குறைவான தகவல்களே தெரிவிக்கப்படுவதாகும். உதாரணமாக தில்லி அரசு இச்சட்டத்தின் செயலாக்கத்திற்காக என ஒரு திட்டத்தை வைத்துள்ளது. ஆனால் நிதி ஒதுக்கீட்டிற்கான வகைமுறைகள் குறித்த எவ்வித தகவல்களும் இல்லை. இது குறித்து விசாரித்தபோது தில்லி அரசிடமிருந்து வந்த தகவல், "பாதுகாப்பு அலுவலர்கள் தங்களது பணிகளைச் செய்யும்போது ஏற்படக்கூடிய அவசரச் செலவுகளை ஈடுகட்டுவதற்காக 10 மாவட்டங்களின் அதிகாரிகளிடையே ஒட்டுமொத்த திட்ட ஒதுக்கீடும் பிரித்தளிக்கப்படுகிறது," என்று மட்டுமே தெரிவிக்கிறது. ஹரியானா மாநிலத்தில் இதற்கென ஒதுக்கப்பட்ட செலவினமும் இரண்டு பிரதானமான தலைப்புகளின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளது. இதர செலவுகளும், இதர கட்டணங்களும் திட்ட ஒதுக்கீட்டின் குறிப்பான அம்சங்களை பிரதிபலிப்பதாக இல்லை. அதேபோல் பல மாநில அரசுகளைப் பொறுத்தவரையில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட குறிப்பான உட்கூறு திட்டங்கள் குறித்த மதிப்பீடுகளுக்கு வரமுடியவில்லை.

### 3. யார் பொறுப்பு ?

குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அதற்கு பட்ஜெட் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது தொடர்பான பிரதான பிரச்சனையை விவாதிப்பது ஒரு புறமிருக்க, பெண்களின் பிரச்சனைகளுக்கு ஒட்டுமொத்த முன்னுரிமை அளிப்பது என்பது மிகக் குறைவாகவே இருக்கிறது. பல்வேறு துறைகளாலும் அமைச்சகங்களாலும் இயக்கப்படுகிற, பெண்களுக்கான பல்வேறு சிறப்புத் திட்டங்களுக்கு மிகக் குறைவான நிதி ஒதுக்கீடுதான் செய்யப்படுகிறது என்பதிலிருந்தே இது தெளிவாகிறது. இந்த ஆண்டு பட்ஜெட் உரையில், "பாலினம் சார் பட்ஜெட் அறிக்கை" என்ற அறிக்கையில் பெண்களுக்கு என முக்கியத்துவம் வாய்ந்த 60 திட்டங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 11 திட்டங்களுக்கு மட்டுமே ரூ. 100 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. மூன்று திட்டங்களுக்கு மட்டுமே மகப்பேறு மற்றும் குழந்தை நலம், அனுசரிக்கத்தக்க தொகுப்பு நிதி, ஊரக குடும்ப நல சேவைகள் மற்றும் இந்திரா ஆவாஸ் யோஜனா ஆகிய மூன்று திட்டங்களுக்கு மட்டும்தான் ரூ.1000 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சிறப்பு உட்கூறு நிதிகளைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்முறை (தடுப்பு) சட்டம் (1989) ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் நிதி ஆதாரங்கள் மாநில அரசுகளிடம் 50க்கு 50 என்ற அடிப்படையில் ஒப்படைக்கப்படுகின்றன. யூனியன் பிரதேச அரசுகளுக்கு 100 சதவீதம் வழங்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு மையம் மற்றும் சிறப்பு காவல் நிலையங்களை வலுப்படுத்துவதற்காகவும், செயல்படுத்துவதற்காகவும் இந்த நிதி வழங்கப்படுகிறது. சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தல், வன்கொடுமைகளால் பாதிகக்கப்பட்டோருக்கு நிவாரணமும் மறுவாழ்வும் கிடைக்கச் செய்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய பிரிவுகளுக்கும் நிதி வழங்கப்படுகிறது. ஆகவே குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 1) பாதுகாப்பு அலுவலர்களின் ஊதியம், துணை ஊழியர்கள், உள்கட்டுமானம், பயிற்சி, வட்டார அளவிலான பயணங்கள், எழுதுபொருள்கள், அவசரத்தேவைகள் ஆகிய பிரிவுகளின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது அவசியமாகிறது. ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல பெரும்பாலான திட்ட அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில்தான் நியமிக்கப்படுகிறார்கள். இதனை ஒரு முதல்கட்ட நடவடிக்கையாகவே எடுத்துக்கொள்ள முடியும். ஏனெனில் பயனுள்ள முறையில் இதன் சேவைகளைக் கொண்டு செல்ல நிரந்தரமான பணி நியமனங்கள் தேவைப்படுகின்றன. 2) காவல்துறையினர், மருத்துவ அலுவலர்கள், நீதித்துறையினர் ஆகியோருக்கு பயிற்சி அளிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டியுள்ளது. சேவைப் பணியாளர்களுக்கு ஆதரவாக நிதி தேவைப்படுகிறது. மக்களிடையே பரவலாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நிதி தேவைப்படுகிறது.

மூன்றாவது முக்கிய அம்சம், செலவினங்கள் மிகக் குறைந்து போயிருப்பதாகும். ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளது போல, மாநில அரசுகள் மிகக் குறைவான நிதி ஒதுக்கீடுகளையே செய்தன என்பதோடு, அந்த நிதிகளையும் முழுமையாகச் செலவிடுவது என்பது நடைபெறவில்லை. போதுமான ஆட்கள் இல்லை என்பது முதல், திட்டத்தைச் செயல்படுத்தக்கூடிய அலுவலர்களிடையே போதுமான விழிப்புணர்வு இல்லை என்பது வரையில், பல்வேறு காரணங்கள் உள்ளன.

**குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அதற்கு பட்ஜெட் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது தொடர்பான பிரதான பிரச்சனையை விவாதிப்பது ஒரு புறமிருக்க, பெண்களின் பிரச்சனைகளுக்கு ஒட்டுமொத்த முன்னுரிமை அளிப்பது என்பது மிகக் குறைவாகவே இருக்கிறது.**

இப்பொழுது எழுகிற கேள்வி என்னவென்றால் இந்த நிதி ஒதுக்கீடுகளை யார் செய்வது? அது எந்தவகையில் இருக்க வேண்டும்? மாநில அரசுகள் தொடர்ந்து நிதி ஒதுக்கீடுகளை செய்து வரவேண்டும் என்பது முக்கியமானதுதான். அதே நேரத்தில் மத்திய அரசும் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஆதரவு நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். இவ்வாறு மத்திய அரசு வழங்கக்கூடிய நிதி ஒரு கூடுதல் உதவி என்பதாகத்தான் இருக்கவேண்டுமேயன்றி ஏற்கெனவே உள்ள நிதி ஒதுக்கீட்டை எடுத்துவிட்டு அந்த இடத்தில் இதனை வைப்பதாக மாறிவிடக்கூடாது.

### திட்ட வரைவில் உள்ள பிரச்சனைகள்

"குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம்–2005 பயனுள்ள செயல்பாட்டிற்கு என மாநில அரசுகளுக்கு வழங்கப்படும் உதவிகளுக்கான மத்திய நிதித்திட்டம்" தொடர்பான கருத்துக்களை தேசிய மகளிர் ஆணையம் கேட்டுள்ளது (தேசிய மகளிர் ஆணையம்–2011). இந்த வரைவுத் திட்டத்தின் நோக்கமாக "12வது திட்டக் காலத்தில் நாடு முழுவதும் பெண்களின் தலையீட்டிற்கான சிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்துவதன் மூலமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்ப்பது," என அறிவிக்கப்பட்டுள்ளது. 1980ம் ஆண்டுகளிலேயே மகாராஷ்டிரா மாநிலத்தில் மும்பை காவல்துறையும், டாடா சமூக விஞ்ஞான நிறுவனமும் கூட்டாக மேற்கொண்ட ஒரு முன்முயற்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சிறப்புப் பிரிவுகளை முன்மாதிரியாகக் கொண்டு (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பிரிவுகள்) இந்த வரைவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பிரிவுகளுக்கான முன்மாதிரிகளை உருவாக்குவதைப் பொறுத்தவரையில் தற்போதைய காவல்துறை அமைப்பு ஒரு மையமான பாத்திரம் வகிக்கிறது. வரைவுத் திட்டத்தில் கூறியுள்ளபடி, சிறப்புப் பிரிவுகளின் பணிகள் பின்வருமாறு: பெண்களின் சுயமரியாதையை உயர்த்துதல், பாதுகாப்பு அலுவலராகவும்,

குழந்தை திருமண தடுப்பு அலுவலராகவும் செயல்படுதல், சேவைகளும் ஆலோசனைகளும் வழங்குதல், அமைப்பு சார்ந்த ஆதரவு, சட்ட உதவி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மேற்கொள்ளப்படும் பணிகளை ஆவணப்படுத்துதல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தவரையில் சிறப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதுதான் ஒரு சிறந்த அணுகுமுறையாகத் தெரிகிறது. எனினும், இதில் கவனிக்கப்படவேண்டிய பல அம்சங்கள் உள்ளன. முதல் பிரச்சனை இந்தத் திட்டத்திற்கான அடிப்படை அணுகுமுறை தொடர்பானதாகும். இந்தத் திட்டத்தின்படி, பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்புகொள்ளக்கூடிய முதல் நபரான திட்ட அலுவலர் ஒரு காவல்நிலையத்தில் இருக்க வேண்டும். இவ்வாறு திட்ட அலுவலரைக் காவல்நிலையத்தில் இருக்க வைப்பதன் மூலம், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தற்போதைய குற்றவியல் நீதி அமைப்பின் கீழ் உணர்வு ரீதியாகவும், நேரடியாகவும் மனதளவிலும், சட்டப்பூர்வமாகவும் ஒரு தளம் கிடைக்கிறது என்று தேசிய மகளிர் ஆணையம் கூறுகிறது. ஆயினும் இந்த ஏற்பாடு, குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டதன் அடிப்படை நோக்கத்தையே தள்ளுபடி செய்வதாக இருக்கிறது. ஏற்கெனவே உள்ள குற்றவியல் சட்டங்கள் போதாது என்பதால்தான் ஒரு குடிமைச் சட்டமும் தேவை என்ற அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இரண்டாவதாக இந்தச் சட்டத்திற்கான நிதி மத்திய–மாநில அரசுகள் 50க்கு 50 என்ற அடிப்படையில் பிரித்துக்கொள்கிற சிஎஸ்எஸ் மூலமாகப் பெறப்படும் என்று திட்டவரைவில் கூறப்பட்டுள்ளது. இதில் இரண்டு முக்கியப் பிரச்சனைகள் உள்ளன. முதலாவதாக இதற்கான நிதி சிஎஸ்எஸ் மூலம் கிடைக்கும் என்பதே கேள்விக்குறியாகிவிடுகிறது. சிஎஸ்எஸ் செயல்முறையில் பல்வேறு பிரச்சனைகள் இருப்பதை ஜா, தாஸ் மற்றும் ஆச்சார்யா (2011) அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இந்த சிஎஸ்எஸ் கட்டமைப்பு மேலேயிருந்து கீழ்நோக்கி வருவதாக இருக்கிறது. சட்டத்தை செயல்படுத்தும் அமைப்புகளுக்கான அனுசரித்துக்கொள்ளத் தக்க ஏற்பாடு எதுவும் இதில் இல்லை. இந்த சட்டத்தைப் பொறுத்தவரையில் அதனை செயல்படுத்தக்கூடிய அமைப்புகள் என்று மாநில அரசுகள்தான் குறிப்பிடப்படுகின்றன. இது மாநில அரசுகள் தங்களது வட்டாரத் தேவைகளுக்கேற்ப திட்டத்தில் மாற்றங்கள் செய்துகொள்வதற்கான வாய்ப்புகளை கடுமையாகச் சுருக்கிவிடுகிறது. இரண்டாவதாக 50சதவிகித சுமை மாநில அரசுகள் மீதே ஏற்றப்படுகிறது. மாநில அரசுகளுக்கு நிதிப்பொறுப்பு மற்றும் பட்ஜெட் நிர்வாக சட்டத்தின் கீழ் பல்வேறு நெருக்கடிகள் உள்ளன. அதனைக் கருத்தில் கொள்ளாமல் இந்த விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக சட்டத்தை பயனுள்ள முறையில் செயல்படுத்த அவசியமான பல உட்கூறு அம்சங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

வட்டார அளவிலான ஒவ்வொரு காவல்நிலையத்திலும் இரண்டு சமூகப் பணியாளர்கள் இருப்பார்கள் என்று திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் கூடுதல் பாதுகாப்பு அலுவலராக அறிவிக்கப்படலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. முழுநேர பாதுகாப்பு அலுவலர் என்பவர் மாவட்ட அளவில் மட்டுமே நியமிக்கப்படுவார். அவரது அலுவலகமும் காவல்துறை தலைமை அலுவலகத்தில்தான் இருக்கும். ஒரு பாதுகாப்பு அலுவலருக்கு உதவியாக ஒரு சட்ட உதவியாளர், கள ஒருங்கிணைப்பாளர், கணினி தகவல் பதிவாளர், பன்னோக்குப் பணியாளர் ஆகியோர் இருப்பார்கள். ஹரியானா மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பிரிவின்படி பாதுகாப்பு அலுவலர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருப்பார். இந்த அலுவலருக்கான நிதி ஆதாரமாகவும் வழிகாட்டும் அமைப்பாகவும் டி.ஐ.எஸ்.எஸ். அலுவலகம் செயல்படும். ஆய்வு, ஆவணப்படுத்துதல், பயிற்சி, திறன் வளர்ப்பு, கொள்கை முடிவு எடுத்தலில் பங்கேற்பு உள்ளிட்ட பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அலுவலருக்கு உதவுவதற்கான ஊழியர்களை நியமிக்க திட்ட வரைவில் வழி செய்யப்பட்டுள்ளது என்ற போதிலும், மாவட்ட அளவில்தான் பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இது போதுமானதல்ல. சேவைப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் மாவட்டத்துக்கு அதிகபட்சமாக இரண்டு பேர் என்ற அளவில்தான் மத்திய உதவி வரையறுக்கப்பட்டுள்ளது. இது கண்டிப்பாக மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஏனெனில் ஒரு மாவட்டத்துக்கு இரண்டு சேவைப் பணியாளர்கள் என்பது ஏற்கெனவே கூறியதுபோல போதுமானதல்ல. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான சேவைப் பணியாளர்களுக்கு ஓராண்டு காலத்தில் வழங்கப்படக்கூடிய நிதி ஒதுக்கீட்டிற்கு இந்தத் திட்ட வரைவில் அதிகபட்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகச் செலவு, போக்குவரத்துச் செலவு உட்பட ஆண்டுக்கு ரூ. 5,000 வழங்கப்பட வேண்டும் என்று சட்டவரைவில் கூறப்பட்டுள்ளது.

பயிற்சி அளிப்பதற்கும் திறன் வளர்ப்பதற்குமான செலவினங்களை மீண்டும் எம்.டபிள்யு.சி.டி. பொறுப்பிலேயே இந்தத் திட்டம் தள்ளிவிடுகிறது. இதற்காக என தனி நிதி ஒதுக்கீடு தேவையில்லை என்று அது

கூறுகிறது. பெண்களிடையேயும், இது தொடர்பான அக்கறையுள்ள மற்றவர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாகவும், உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தில் போதுமான அளவிற்கு கூறப்படவில்லை.

கண்காணிப்பைப் பொறுத்தவரையில் மத்திய அளவிலும் மாநில அளவிலும் ஒரு ஒருங்கிணைப்பாளர் தேவை என்று திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இவர்களது பணிகள் குறித்து மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் இவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பது குறித்து எதுவும் விரிவாகச் சொல்லப்படவில்லை. வெளிப்படையான முறையில் இந்த நியமனங்கள் அமையவில்லையென்றால் அது பிரச்சனைகளைத்தான் ஏற்படுத்தும். மேலும் பெண்களுக்கு எதிரான வன்முறை என்ற பிரச்சனையை கையாள்வதில் மாநில அரசின் பொறுப்பை ஒரு வெளி அமைப்புக்கு மாற்றுகிற அணுகுமுறைதான் இதில் வெளிப்படுகிறது.

**மாற்றுத் திட்டம்:**

ஆக, திட்டத்தில் பல்வேறு இடைவெளிகள் இருக்கும் நிலையில் ஒரு மாற்றுத் திட்டத்தை முன்வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்தந்த வட்டார அளவிலான தேவைகளை கணக்கில் எடுத்துக்கொள்கிறபோதுதான் எந்தவொரு கொள்கையும் வெற்றியடைய முடியும். எனவே, தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள அனுசரிக்கத்தக்க தொகுப்பு நிதி ஏற்பாட்டைப் போலவே எம்.டபிள்யு.சி.டீ. மூலமாகவும் மாநிலங்களுக்கு ஒரு அனுசரிக்கத்தக்க நிதி ஏற்பாடு வழங்கப்பட வேண்டும். இது ஒவ்வொரு மாநிலமும் தனது தேவைகளுக்கேற்ப திட்டங்களை உருவாக்க உதவும். மாநிலங்கள் தங்களுடைய சொந்தத் திட்டங்களை உருவாக்கிக்கொள்வதற்கு போதுமான அளவிற்கு ஏற்பாடுகள் இருக்க வேண்டும் என்பது அவசியம். இல்லையென்றால் இதன் தாக்கம் குறிப்பிட்ட அளவோடு நின்றுவிடும். அனுசரிக்கத்தக்க நிதித் தொகுப்பிலிருந்து ஒதுக்கப்படும் நிதிகளை கண்காணிக்கிற பொறுப்பை உயர்மட்ட அமைப்பாகிய எம்.டபிள்யு.சி.டீ. எடுத்துக்கொள்ள வேண்டும்.

**Courtesy – Economic & Political weekly (August 2011)**

## சுப்ரீம் கோர்ட் நீதிபதி கவலை
## ஐகோர்ட்டுகளில் 42.92 லட்சம் வழக்குகள் தேக்கம்

“ஐகோர்ட்டுகள் மற்றும் கீழ்க்கோர்ட்டுகளில், தேங்கும் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருவது கவலை தரும் விஷயம். இந்தப் பிரச்சனையைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம், ” என, சுப்ரீம் கோர்ட் நீதிபதி தல்வீர் பண்டாரி கூறியுள்ளார்.மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் அகில இந்திய மாநாட்டில் நேற்று பேசிய அவர் மேலும் கூறியதாவது:

கீழ்க் கோர்ட் மற்றும் ஐகோர்ட்டுகள் அளவுக்கு சுப்ரீம் கோர்ட்டில் வழக்குகள் தேங்கவில்லை. அங்கு சமாளிக்க கூடிய அளவுக்கே, வழக்குகளின் எண்ணிக்கை உள்ளது. இந்த ஆண்டு மார்ச் 31ம் தேதி நிலவரப்படி, கீழ்க் கோர்ட்டுகளில் 2.74 கோடி வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அதே நேரத்தில், ஐகோர்ட்டுகளில் 42.92 லட்சம் வழக்குகள் நிலுவையில் இருந்தன. அக்டோபர் 31ம் தேதி வரை சுப்ரீம் கோர்ட்டில், 53 ஆயிரத்து 383 வழக்குகள் நிலுவையில் உள்ளன. நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்க ஐகோர்ட்டுகளுக்கு மாற்றாக, தீர்ப்பாயங்கள் செயல்பட வேண்டும். இவ்வாறு தல்வீர் பண்டாரி கூறினார். இதே நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய பார்லிமென்ட் விவகார அமைச்சர் பவன்குமார் பன்சால் பேசுகையில், “கோர்ட்டுகளில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்க, மாற்று நிறுவனங்களை உருவாக்க வேண்டியது அவசியம்.”

சுப்ரீம் கோர்ட் மற்றும் ஐகோர்ட்டுகளின் சுமையை அதிகரித்துக் கொண்டே செல்லக்கூடாது. மற்ற பதிலீட்டு நிறுவனங்களின் செயல்திறனையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மத்திய நிர்வாக தீர்ப்பாயங்கள் இதற்கு உபயோகமாக இருக்கும்,” என்றார்.

**– தினமலர்– 7.8.2011**

For Private Circulation Only



http://www.thehindu.com/news/article2446743.ece

# பரமக்குடியில் தலித்களை அரசே கொன்று குவித்தது



popularfrontindia.org



hastalavictoriasiambre.blogspot.com

*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by*

***Human Rights Advocacy and Research Foundation (HRF)***

*New # 10, Old # 109, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*

*☎ 22353503, 22351919 Fax : 22355905, E-mail : humanrightsfoundation@yahoo.co.in*

*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*